

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## வைகாசி – ஆனி

மலர் 11 ஜுன் 2022 இதழ் 6

பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 5 |
| வண்டு ஸ்தோத்ரம் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 10 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 13 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 5 | 16 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 18 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 22 |
| ஆனி மாத விசேஷ தினங்கள் | 25 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 26 |
| பகவத் பாதரும் ஸங்கீத ஞானமும் | 29 |
| ஈச்வர தத்துவம் | 32 |
| ஸங்கர கீதை | 35 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 40 |
| புராணக்கதை | 42 |
| மகாபாரத சுருக்கம் | 44 |
| ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள் | 46 |







भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்

## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

இதுவே நான் செய்யும் ப்ரார்த்தனை இறைவா! நெஞ்சில் முளைக்கும் தாழ்ச்சி எண்ணத்தின் வேரை நோக்கி ஓங்கி அடி. இன்ப துன்பத்தை எளிதில் தாங்கிட எனக்குப் பொறுமை அளித்திடு, நற்பலன்கள் விளையும் பணிகளை நான் பாசமுடன் புரிய நல்கிடு.

வறியாரை என்றும் மறவாதிருக்கவும் நெறியிலா மூர்க்கர் முன்பாக முழங்கால் மடக்கி என்றும் வணங்காதிருக்கவும் எனக்கு வைராக்யம் தந்துவிடு. தினச்சச்ரவிலிருந்து விடுபட்டு மனம் அப்பால் சென்று என் உள்ளம் உயர்ந்து சிந்திக்க மனத் தெளிவை தந்திடு. எனது ஆற்றல் முழுவதையும் ஒப்படைத்து உன் ஆசைப்பணிக்கு பாசமொடு உழைத்திட எனக்குச் சக்தியை அளித்திடு.

***(கீதாஞ்சலி 36)***

நானறியாத புதிய தோழர்களைத் தானாக அறிமுகம் பண்ணிவைத்தாய் எனக்கு. அன்னியர் இல்லத்தே என்னை உபசரிக்க ஆசனங்கள் அளித்தாய் நீ. தூரத்து மனிதரை அழைத்து என் ஒரத்தில் அமர வைத்தாய். தெரியாத வழிப்போக்கனை எனக்குத் தமையனாக்கினாய். நிறைந்தங்கே நீ இருப்பதுவும் தெரியாமல் போன தெனக்கு. வாழ்க்கை நியதிக்கு வழிகாட்டி துணைவன் நீ. உன்னை அறிந்தவர் எவரும் எனக்கு அன்னியர் ஆகார். உவப்புடன் வணங்கி அவனை ஒரு போதும் மறவாதிருக்கும் மனத்தை அருள்வாய் எனக்கு.

***(கீதாஞ்சலி 63)***

உன் பாதத்திற்கு நான் வந்தனை செலுத்தும்போது எழும் என் உணர்ச்சிகள் இவ்வுலகம் முழுதும் பரவித்தழுவட்டும். என் இறைவனே ஒரு முறை உனக்கு நான் வந்தனம் செய்யும் போது என் கீதங்கள் மௌனக்கடல் நோக்கி செல்லட்டும்.

வர்ஷ ருதுவின் மேகங்கள் பார்த்தால் வளைந்து இருப்பதுபோல் என் மனமும் உன்னை நமஸ்கரிக்க வளையட்டும். ஒரு முறை நான் வந்தனம் செய்யும்போது தம் கூட்டுக்கு மீளும் கொக்கு மந்தை போல் என் வாழ்க்கைப் பயணமும் நேரே செல்லட்டும் அதன் நிரந்தர இல்லம் நோக்கி ஒருமுறை உனக்கு நான் வந்தனம் புரியும்போது.

**(கீதாஞ்சலி 103)**

# ஆசிரியர் பக்கம்

அண்மையில் ஆங்கில ஜோதிட நூல் (ASTROLOGICAL MAGAZINE) ஒன்றில் ஸ்ரீசங்கரரின் காலம் பற்றி ஒரு சுவையான கட்டுரை வந்திருந்தது. இந்த பத்ரிகை B.V RAMAN என்பவரால் துவக்கப்பட்டு தற்போது அவரது மகளால் நடத்தப்பட்டு வருகிறது. அந்த துறையில் ஆராய்ச்சி மனப்பான்மையுடன் ஆதாரத்துடன் உண்மைகளைச் சொல்லும் பத்திரிகை. அதில் எர்னெஸ்ட் வில்ஹெம் என்பவர் ஸ்ரீ சங்கரரின் காலம் கிறிஸ்து பிறப்பதற்கு முன் தான் என்பதை ஜோதிஷ ஆதாரங்களுடன் நிறுவியிருக்கிறார். அவரும் பல ஜோதிஷ க்ரந்தங்களின் ஆதாரத்துடனும் கணக்குகள் மூலமாகவும் ஸ்ரீ சங்கரரின் காலம் கி.மு என்று நிறுவுகிறார். இந்த விஷயத்திற்கு இவ்வளவு ஸ்ரமப்பட வேண்டாம் என்பது எம் கருத்து. இது குறித்து சில விஷயங்களை சுருக்கமாக ஆராய்வோம். காலம் காலமாக கி பி -ஆம் நூற்றாண்டே என்னும் வாதம் சரியானதல்ல.

ஸ்ரீ சங்கரரின் காலம் கி.மு மூன்று அல்லது நான்கு என்று பாரம்பரியர்களின் கொள்கை. அது தவறு. அவர் கி.பி 7ஆம் நூற்றாண்டில பிறந்தவர் என்பது மேனாட்டு ஆராய்ச்சியாளர்களின் கொள்கை. நம் நாட்டில் இருக்கும் மெத்தப் படித்த மேதாவிகளும் ஆராயாமல் அதையே பிடித்துக் கொண்டு அக்காலத்தையே நிறுவுவர். கொஞ்சம் யோசிப்போம். காஞ்சீ மடம், த்வாரகா மடம், பூரி மடம் இம்மூன்றும் ஆசார்யரின் காலம் கி மு தான் என்று கூறும். அம்மடங்களின் ஆசார்ய பரம்பரையைப் பார்த்தால் இது புரியும். இதை தியாசாபிகல் நிறுவனத்தில் ஸ்ரீ சுப்ரமண்ய ஐயர் ஸ்ரீ சங்கரரின் காலம் கி.மு 6ஆம் நூற்றாண்டு என்று எழுதியிருக்கிறார். அன்னி பெசன்ட் முதலானவர்களும் இதை ஆமோதிக்கிறார்கள். இது தவிர நேபாள வம்சம், ஜின விஜயம் என்னும் நூல்களிலும் ஸ்ரீசங்கரரின் காலம் கி மு 5 ஆம் நூற்றாண்டு என்று பல வித சான்றுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர ராமசந்த்ர தீட்சிதர் த. ந. குமாரஸ்வாமி என்பவர்களும் இதையே சொல்லியிருக்கிறார்கள்.

ஸ்ரீ கோடா வெங்கடாசல சாஸ்த்ரிகளும் ஆசார்யரின் காலம் கி. மு என்றே கூறுவர். இது தவிர internal evidence மூலமாகவும் அவரது காலம் கி.மு என்றே புலப்படும். குரு ரத்ன மாலை, புண்யஸ்லோக மஞ்சரீ நூல்களும் இதையே கூறும். ஸ்ரீ சரணர்கள் இதை விஸ்தாரமாக சங்கர சரிதத்தில் கூறியுள்ளார்கள். பெரும் பண்டிதர்கள் கூட தடுமாறி

கி.பி 7ஆம் நூற்றாண்டு என்று கூறுவது விந்தையாக உள்ளது. இதற்குக் காரணம் பல ஆசார்யார்கள் சங்கர நாமம் தாங்கி அருள் செய்துள்ளார்கள். குழப்பத்திற்குக் காரணம் இதுதான். நமது பாரத சரித்ரத்திலேயே இம்மாதிரி தவறுகளை மேனாட்டார் எழுதியுள்ளார்கள். ஒரு விஷயத்தைப் பார்ப்போம்.

காஞ்சீ மடத்தின் ஆசார்ய பரம்பரையில் ஐந்து சங்கரர்கள் ப்ரசித்தி பெற்று இருந்திருக்கிறார்கள். ஆதி சங்கரர், க்ருபாசங்கரர், மூகசங்கரர், உஜ்வல சங்கரர், அபி நவ சங்கரர் என்பவர்கள் அருளாட்சி செய்துள்ளார்கள். இதில் அபி நவ சங்கரர் கி. பி 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். திருஞான சம்பந்தரின் சமகாலத்தவர். வட மொழியில் பக்தி ஸ்லோகங்களை இயற்றியவர். கிட்டத்தட்ட ஆதி ஆசார்யர் போலவே திக் விஜயம் செய்து அத்வைதத்தையும் பக்தி மார்கத்தையும் பரப்பியவர். இவரது காலத்தை ஆதி சங்கரரின் காலமாக கொள்வது விபரீத முடிவாகும்.

மேனாட்டார் செய்த தவறை நம்மவர்களும் செய்தது அதைவிட அபத்தம். ஏதோ இந்தவரையில் ASTROLOGICAL MAGAZINE மூலமாக பாரம்பரியர்கள் கூறும் காலம் உண்மையானதுதான் என்று நிறுவப்பட்டுள்ளது. மிக்க மகிழ்ச்சியே. அப்பத்ரிகைக்கு நன்றி சொல்லுவோம். காலத்தைக் கடந்து நின்றவருக்கு கால நிர்ணயம் செய்வது விசித்ரம்தான். ஆராய்ச்சி என்று வந்தால் கூற வேண்டியது கடமை. மேலும் ஸ்ரீசங்கரரைப் பற்றி இரண்டு கோஷம் உண்டு. ஒன்று இப்போது (கால நிர்ணயம்) முடிந்தது எனலாம். இன்னொன்றும் முடிவுக்கு வரும் என்று எண்ணுகிறோம் என்று கூறி ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் இவ்விதழை ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர

# வண்டு ஸ்தோத்ரம்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# கருத்திலும் தொடர்ச்சி காட்டும் ச்லோகம்

**உத் - த்ருக - நக**



'நகம்' Nagam என்றால் மலை 'கம்' gam என்றால் நடப்பது, அசைவது, சலிப்பது, அசையாமல் சலிக்காமல் இருப்பதால் தான் மலைக்கு 'அசலம்', 'அகம்' 'நகம்' என்றெல்லாம் பெயர் ஏற்பட்டிருக்கிறது. பர்வதராஜ குமாரியாக இருக்கப்பட்ட அம்பாளை 'கிரிஜா' (கிரி என்றாலும் மலைதானே?) என்கிற மாதிரியே, 'அசுஜா' 'நகஜா', என்றெல்லாமும் சொல்வதுண்டு. பிள்ளையாரின் மேல் எல்லோரும் சொல்கிற ஸ்தோத்ரம் ஒன்றுகூட 'அகஜாநந பத்மார்க்கம் கஜாநநம்' என்று ஆரம்பிக்கிறது. இவர் கஜ ஆநநர் அதாவது ஆனை முகர். 'கஜாநநத்' துக்கு (சொல்லிலக்கணப்படி) opposite 'அகஜாநநம்'. ஆனால் வார்த்தையின் அர்த்தப்படி பார்த்தாலோ, இந்த கஜாநநர், அகஜாவான பார்வதியின் ஆநந (முக) பத்மத்தை மலர்விக்கும் அர்க்க (ஸூர்ய)னாக இருக்கிறார்!

**அகஜாநந பத்மார்க்கம் கஜாநநம்**

அகம், நகம் இரண்டுக்கும் ஒரே அர்த்தம். மலை என்று பொருள். 'உத்-த்ருத நக' என்றால் மலையைத் தூக்கியவனே, மலையைத் தாங்கியவனே என்று அர்த்தம். 'கிரிதர கோபாலன்' என்று மீராபாய் எப்போது பார்த்தாலும் பாடிக்கொண்டிருந்தது இந்த அவஸரத்தைத்தான்.

பகவான் இரண்டு ஸந்தர்ப்பங்களில் மலையைத் தூக்கியிருக்கிறான். அம்ருதம் எடுப்பதற்காக க்ஷீரஸாகரத்தில் மந்தர மலையை மத்தாகப் போட்டு வாஸுகிப் பாம்பை நாணாகச் சுற்றிக் கடைந்தபோது, மஹா விஷ்ணுவேதான் அந்த மலை ஸமுத்ரத்தில் ஆடாதபடி அதை அடியிலிருந்து ஆமை ரூபத்தில் தாங்கிக் கொண்டிருந்தார். அப்புறம், க்ருஷ்ணனாக அவதாரம் பண்ணினபோது, இந்த்ரனின் கோபத்தினால் பெரிய மழை உத்பாதம் ஏற்பட்டபோது கோவர்தனகிரியைக் குடையாகத் தூக்கி கோகுலம் முழுவதையும் மழையிலிருந்து காப்பாற்றினார். அவர்தான் கிரிதர கோபாலன். நம்முடைய கர்ம பாரம் ஒரு மலை மாதிரி. இதை பகவான் தான் சுண்டு விரல் நுனியிலே பாலக்ருஷ்ணன் கோவர்தன கிரியைத் தாங்கின மாதிரி தாங்க வல்லவன்: **'உத்-த்ருத நக'**.

'நகபி தநுஜ–: 'நகபித்', 'அநுஜ' என்ற இரண்டு வார்த்தைகள் சேர்ந்து 'நகபிதநுஜ' என்றாகிறது. 'நகபித்' என்றால் மலைகளைப் பிளந்தவன் என்று அர்த்தம். பூர்வத்தில் மலைகளுக்கு இருந்த இறக்கைகளை தேவேந்திரன் வஜ்ராயுதத்தால் வெட்டினான் என்று கதை. இந்த தேவேந்த்ரனுக்கு 'அநுஜன்' என்றால் உடன் பிறந்தவன்' என்று அர்த்தம். உடன் பிறந்தவன்' என்றால் மட்டும் போதாது. பின்னால் பிறந்தவன், அதாவது தம்பிதான் அநுஜன். முன்னால் பிறந்த அண்ணா, பின்னால் பிறந்த தம்பி இரண்டுபேருமே 'உடன் பிறந்தவர்' தான். இவர்களில், முன்னால் பிறந்த அண்ணாவைப் 'பூர்வஜன்'' என்றும், பின்னால் பிறந்த தம்பியை ''அநுஜன்'' என்றும் சொல்ல வேண்டும்.

தேவேந்த்ரனுக்குத் தம்பியாகப் பிறந்தவர் பகவான்.

ராமாநுஜன் என்றால் ராம அநுஜன். அதாவது அதாவது ராமனுக்குத் தம்பியான லக்ஷ்மண ஸ்வாமி. லக்ஷ்மணன் ஆதி சேஷ அவதாரம். சேஷாவதாரமாகவே வைஷ்ணவர்கள் சொல்கிற ராமாநுஜாசாரியாருக்கு லக்ஷ்மணன் என்றே பூர்வாச்ரமத்தில் பெயர்.

விஷ்ணு எப்போது இந்த்ரனுக்குத் தம்பியாகப் பிறந்தார்? வாமனாவதாரத்தின் போதுதான். இந்த்ராதி தேவர்கள் யாவரும் கச்யப மஹரிஷிக்கும் அதிதி என்கிற அவருடைய பத்னிக்கும் பிறந்தவர்கள். மஹாபலியை அடக்குவதற்காக பகவான் வாமனராக அவதாரம் செய்த போது, அதிதி - கச்யப தம்பதிக்குத்தான் பிள்ளையாகப் பிறந்தார். இதனால், இந்த்ரனுக்கு அநுஜனாகிவிட்டார். 'உபேந்த்ரன்' என்றுகூட இதனால் அவருக்கு ஒரு பெயர் உண்டு.

க்ருஷ்ணாவதார காலத்தில் இந்த்ரனின் கர்வத்தை அடக்கி அவனை அடிபணிய வைப்பதற்காகத்தான் கோவர்தன கிரியைத் தூக்கி 'உத்-த்ருத நக'ராக ஆனார். பூர்வத்தில் வாமனாவதாரத்தில் அதே இந்த்ரனுக்கு ஸஹோதரனாக - 'நகபிதநுஜஂ'னாக - இருந்திருக்கிறார்! அப்போது மஹாபலியை அடக்கி இந்த்ரனுக்கு தேவலோக ஆதிபத்யத்தை மீட்டுக் கொடுத்தார். பகவானுக்குத் தனியாக ஒரு மனுஷ்யர் மீது ப்ரியம். அப்ரியம் என்பதில்லை. ஒருவர் அடக்கத்துடன் தர்ம வழியிலே வர நினைத்தால் ப்ரியமாயிருப்பார்; அவரே அஹங்கரித்துக்கொண்டு அதர்மமாகப் போனால் தண்டிப்பார். ஒருத்தர் செய்யும் நல்லது - கெட்டதுகளை வைத்தே அவரது ப்ரியாப்ரியங்கள். ஒரே ஆஸாமியின் விஷயமாக இப்படி அவர் மாறுபட்டுச் செய்ததை ஒரே ச்லோகத்தில் அடுத்தடுத்து ஆசார்யாள் கோத்துக்கொடுத்திருக்கிறார்: **'உத்-த்ருதநக, நகபிதநுஜ'.**

**'தநுஜ-குலாமித்ர': 'தநுஜர்'** என்றால் அஸுரர்கள்– 'தநு' என்பவளின் பிள்ளைகள்தான் தநுஜர்கள். தேவர்களுக்குப் பிதாவான அதே கச்யபரின் பத்னிதான் தநுவும். தேவர்கள், அஸுரர்கள் அனைவருக்கும் அவரே பிதா. மாதாக்கள் வேறு வேறு. அதிதியின் பிள்ளைகளான தேவர்களை ஆதித்யர் என்கிறார்கள். 'திதி' என்றும் கச்யபருக்கு ஒரு பெண்டாட்டி உண்டு. அவளுடைய பிள்ளைகள் தைத்யர்கள். இவர்களும் அஸுரர்கள் தான். தநுவின் பிள்ளைகளை தநுஜர் என்பது போலவே தானவர் என்றும் சொல்வதுண்டு.

**'நகபி தநுஜ'** என்கிறபோது வந்த **'தநுஜ'** என்பது இரண்டு வார்த்தைகளின் ஸந்தியில் ஏற்பட்டது. அதை **'நகபித் அநுஜ'** என்று பிரித்தால்தான் அர்த்தமாகும். 'நகபி', 'தநுஜ' என்று பிரித்தால் தப்பு. பின்னாடி 'தநுஜ குலாமித்ர' என்று வருவதற்கு அந்தாதி க்ரமத்தில் படி போடுவதற்கே, ஸ்ரீ ஆசார்யாள் **'நகபி தநுஜ'** என்பதில் இரண்டு வார்த்தைகளின் ஸந்தியில் ஒரு 'தநுஜு'வை முடிச்சுப் போட்டிருக்கிறார்!

அநேக ச்லோகங்களில் இப்படி வேடிக்கையாக வரும். 'அகஜாநந பத்மார்க்கம்' ச்லோகத்தில்கூட **'அநேக - தந்தம் பக்தாநாம் ஏக தந்தம் உபாஸ்மஹே'** என்று வருகிறது. இதென்ன வேடிக்கை? ஒருத்தரையே ஏக தந்தர், அநேக தந்தர் என்றால்-அதாவது, ஒரு தந்தம் உள்ளவர், பல தந்தம் உள்ளவர் என்றால்-எப்படி ஸரியாகும், என்று தோன்றுகிறது. 'அநேக - தந்தம்' என்பது 'அநேக தம்' என்ற வார்த்தையாகவும், அதை அடுத்து வரும் 'தம்' என்ற வார்த்தையாகவும் பிரியும். அநேக - தம் - தம் என்பது 'அநேக தந்தம்' என்றாகும். 'பக்தாநாம் அநேகதம்' என்றால்

பிள்ளையார் அவருடைய பக்தர்களுக்கு அநேக விதமான நலன்களை அருள்கிறார் என்று அர்த்தம், '**தம் உபாஸ்மஹே**' என்றால் 'அவரை உபாஸிக்கிறேன்' என்று அர்த்தம். அவருக்கு ஒரே ஒரு தந்தம்தான் உண்டு ஒற்றைக் கொம்பர். ஏக தந்தர். இந்த '**ஏக தந்தம்**' என்பதே வார்த்தை விளையாட்டில் இன்னொரு தரம் வந்தால் கவிதைக்கு அழகு செய்கிறது என்பதற்காக 'அநேக தந்தம்' (அநேகதம் தம்) பக்தா நாம் ஏகதந்தம் உபாஸ்மஹே' என்று ச்லோகத்தில் வைத்திருக்கிறது. Prose order படி இருந்தால் ''பக்தாநாம் அநேகதம் ஏகதந்தம் தம் உபாஸ்மஹே' (பக்தர்களுக்குப் பலவற்றை, அநேக நலன்களை, தரும் ஒற்றைக் கொம்பரான அவரை உபாஸனை செய்கிறேன்) என்று இருக்க வேண்டும். எந்த பாஷையானால், 'பொயட்ரி'யில் வார்த்தைகளை முன் பின்னாக வைக்கலாம் என்ற விதிப்படி இங்கே மாற்றியிருக்கிறது.

**'தநுஜ குலாமித்ர'** என்றால் தநுஜ குலமான அஸுரர்களுக்குப் பகைவர் (அமித்ர) என்று அர்த்தம்.

இந்த்ரனுக்குத் தம்பியாகக் காச்யப - அதிதி தம்பதிக்கு பகவான் அவதரித்தபோது, தநுஜர்களும் அவருக்கு பித்ரு பக்ஷத்தில் (அப்பாவை வைத்துப் பார்த்தால்) அண்ணாமார்கள்தான்; தநுஜர்கள் அவருடைய மாற்றாந்தாயின் பிள்ளைகள். ஆனால் உறவுமுறை பார்க்காமல் தர்மாதர்மங்களையே பகவான் பார்ப்பவராதலால் அவர்களுக்கு அமித்ரராக (பகைவராக) இருந்தார்.

ஒரு ஸமயத்தில் நல்லவனாகவும் ஒரு ஸமயத்தில் அப்படியில்லாமலும் இருக்கிற இந்த்ரனிடம் அவர் அன்போடு தம்பியாக இருந்து மஹாபலியிடமிருந்து அவனுடைய ராஜ்யத்தை க்ரஹித்து அவனுக்கு அதைத் திரும்பக் கொடுத்துமிருக்கிறார்; தண்டிப்பவராக கோவர்தனத்தைத் தூக்கிப் பிடித்து, அவர் சக்கையாய் மழை பெய்து அப்புறம் தானே சக்தியெல்லாம் இழந்து சக்கை மாதிரி வந்து காலில் விழும்படியும் பண்ணினார். எல்லா ஸமயங்களிலுமே கெட்டவர்களாக இருக்கிற தநுஜர்களும் ஸஹோதரர் முறையாக வேண்டியவர்களானாலும், அவர்களுக்கு அமித்ரர் என்றே சொல்லும்படியாக எப்போதும் இருக்கிறார்.

ஒரு வார்த்தையின் முடிவை அடுத்த வார்த்தையின் ஆரம்பமாக கோத்துக் கொண்டு போவது போலவே பகவானின் நிக்ரஹாநுக்ரஹங்கள் (தண்டிப்பதும் அருள்வதும்) எப்படி இருக்கின்றன என்ற ஐடியாவையும் ச்லோகத்தில்டெவலப் பண்ணிக் கோத்துக் கொடுத்தாற் போல இருக்கிறது.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்


## தலித்

ஜாதி இந்துக்களும் இந்துக்கள்தான்; அரிஜன இந்துக்களும் இந்துக்கள்தான். அவர்களை இப்படிப் பிரித்து எழுதக்கூடாது!

'தலித்' என்பது நம் நாட்டிலே இல்லாத ஒரு பெயர். வடநாட்டிலே வி.பி. சிங் வைத்த பெயர் அது. நமக்கு அந்தப்பெயரே தேவை இல்லை. நம்முடைய நாட்டுப் பெயரை, நம்முடைய தெய்வங்களின் பெயரைத்தான் நாம் வைத்திருக்கிறோம். அரசியலுக்காகவும், ஓட்டுக்காகவும் 'தலித்' என்று வைத்துக் கொள்வது சரியல்ல!

அரசியல் சாசனத்தை உருவாக்கி நமக்கெல்லாம். எழுதிக் கொடுத்தவர் அம்பேத்கார். அவருக்கு ஒரு மரியாதை கொடுக்க வேண்டியது நியாயம். அதற்காக 'தலித்' என்று வைத்துக் கொள்ளத் தேவை இல்லை.

சிவசண்முகம் பிள்ளை என்று ஒரு ஸ்பீக்கர் இருந்தார். சுதந்திரப் போராட்டக் காலத்திலே வாழ்ந்தவர். அவர் தன்பெயரை சண்முகம்பிள்ளை என்றுதான் வைத்துக்கொண்டிருந்தார். தலித் என்று வைத்துக் கொள்ளவில்லை.



'பிள்ளை' என்றுதான் அவரைச் சொன்னார்கள்.

'நம்முடைய சமுதாயம்', 'நம்முடைய மக்கள்', 'நம்முடைய நாடு' என்று இருக்க வேண்டும். அவரவர்களுடைய சமய வழிப்பாட்டுப்படி அவரவர்கள் வாழ்க்கை நடத்தினாலே பிரச்சினை வராது. சமயப் பற்றுப்படி அவரவர்கள் வாழ வேண்டும். நம்முடைய சமயப்பற்று வளரவேண்டும்.

காந்திஜி சுதந்திரம் வாங்கியவுடன் இந்தியர்கள் எல்லாரும் கோயிலில் சென்று ஒன்றாக வழிபாடு செய்வதற்கு அனுமதி அளித்தார்.

அதன்படி இப்போது எல்லாக் கோயில்களிலும் எல்லா ஜாதிக்காரர்களும், டிரஸ்டிகளாக இருக்கிறார்கள். எங்கும் எந்தப் பிரச்சினையும் கிடையாது. எல்லாக் கோயில்களுக்கும் எல்லாருமே இப்போது போகலாம்.

நாமும் தனிப்பட்ட முறையில் கோயில்களைக் கட்டிக்கொண்டு வழிபாடுகள் செய்கிறோம்.

அதேபோல இந்துப் பெருமக்கள் எல்லோரும் எந்த வகையிலும் பிரிந்து போய்விடாமல், அதற்கு இடமும் தராமல் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இந்து சமயத்தைக் காப்பதன் மூலம் அனைத்து சமுதாய மக்களுக்கும் வழிகாட்டிகளாக விளங்க வேண்டும். எல்லா உயிர்களுக்கும் எல்லா நலங்களும் கிடைக்க முயல வேண்டும்.

அதனால்தான் இதை ' அனைத்து இந்துமத மாநாடு' என்று போடுமாறு கூறினேன். 'மாநாடு' என்பதால் எளிதில் மக்கள் புரிந்து கொண்டார்கள்.

இந்து மதத்தில் எத்தனை பிரிவுகள் உள்ளதோ, அத்தனை பிரிவுகளும் அடங்கியுள்ள மாநாடு என்பதால் தான் 'அனைத்து இந்துமத மாநாடு' என்று போடச் சொன்னேன்.

நம்முடைய மதத்தின் அடிப்படைத் தத்துவத்தை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நம்முடைய வாழ்க்கை மேன்மை அடையும்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் மற்ற ஜாதிப் பிரச்சாரத்திற்கும், நம்முடைய மதத்திற்கு எதிரான மாற்று மதப் பிரச்சாரத்திற்கும் போகக் கூடாது. அதைக் காதில் வாங்கிக்கொள்ளவும் கூடாது.

# தீதும் நன்றும்

தீயதைக் கேட்பதால் இரண்டு பங்கு பாவம் ஏற்படுகிறது. தீயதைக் கேட்பது முதல் பாவம். நாம் கேட்கக் கேட்க, அவன் மேலும் மேலும் தூண்டப்பட்டுத் தீயதையே சொல்லுவான். அது இரண்டாவது பாவம். அது தூண்டிவிட்ட பாவம். ஆக இரட்டிப்புப் பாவம்.

தீயதைச் செய்பவர்களுக்கு ஒரு மடங்கு பாவம் தான். அதைப் பார்ப்பவர்களுக்கு இரண்டு மடங்கு பாவம் வரும். ஏனென்றால் தீயதற்கு மறுப்பு சொல்ல வேண்டும்.

நீங்கள் எல்லாம் நல்லவர்களாகவே இருக்கிறீர்கள். அப்படி இருந்தும் உங்களுக்குத் துன்பம் வருவதற்குக் காரணம் என்ன? தீயதைப் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருக்கிறீர்கள். அதற்குச் சாட்சியாகவும் இருக்கிறீர்கள்.

தீயதின் பக்கம் செல்லாமல், தீயதை எங்கும் வளர விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அது மிகவும் முக்கியமானது.

காந்தியடிகள் அதற்குத்தான் மூன்று குரங்குப் பொம்மைகளை நமக்கு அடையாளம் காட்டினார். ஒரு குரங்கு 'தீயதைப் பார்க்காதே' என்று தனது இரு கைகளாலும் தனது இரு கண்களைப் பொத்திக் கொண்டு இருக்கும்.

ஒரு குரங்கு 'தீயதைக் கேளாதே' என்று தனது இரு கைகளாலும் தனது இரு செவிகளைப் பொத்திக் கொண்டு இருக்கும்.

இன்னொரு குரங்கு 'தீயதைப் பேசாதே' என்று தனது இரு கைகளாலும், தனது வாயைப் பொத்தி இருக்கும்.

இன்னும்கூடச் சொல்லலாம்.

**தீயதைச் செய்யாதே!**

**தீயதைக் குடிக்காதே!**

**தீயதைச் சாப்பிடாதே!**

காதுக்கும், கண்ணுக்கும் தலா ஒரு கையை மட்டுமே மூடி இருக்கிறது. ஆனால் வாய்க்கு மட்டும் இரண்டு கைகளையும் வைத்து மூடி இருக்கிறது. காரணம் வாய் தீயதையும் பேசுகிறது; தீயதைச் சாப்பிடுகிறது. அந்த இரண்டும் ஒரே வாயில் நடப்பதால் தான் அந்த அந்த வாயை மூடும்படி இரண்டு கைகளையும் வாயின்மீது வைத்து மூடிக்கொண்டு இருக்கிறது

ஒரு வாய்க்கு இரண்டு கைகள்.

நாம் நல்லவர்களாக வேண்டும். நாம் நல்லவர்களாக ஆனால்தான் நம்முடைய வீடும், நம்முடைய நாடும், நம்முடைய சமுதாயமும் நல்லதாக மாறும். ஆகவே நம்முடைய வாழ்வை நாம் நல்ல முறையில் வைத்துக் கொண்டால்தான் நமக்கும் மற்ற எல்லோருக்கும் நல்லது.

***'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் பராபரமே'*** என்று தாயுமானவர் சுவாமிகள் பாடியதுபோல், எல்லோரும் இன்புற்றிருக்க, நாம் இன்புற்று அதன்படி அவர்களை இன்புறச் செய்ய வேண்டும்.

மற்றவர்கள் மட்டும் நன்றாக இருந்தால் போதும் என்று நினைத்தால் நாம் கெட்டுப் போய்க்கொண்டே இருப்போம். எனவே நாம் தான் முதலில் நல்லவர்களாக மாற முயற்சி செய்ய வேண்டும்.

'நீங்கள் நல்லவர்களாக மாறுங்கள்' என்று அடுத்தவர்களைச் சுட்டிக்காட்டிச் சொல்லக் கூடாது.

'நீ, நீங்கள்' என்பதை 'நான், நாம்' என்று மாற்றிச் சொல்லி நல்லவர்களாக மாற வேண்டும். எதிலுமே 'நாம்' சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தவர்களுக்கு மட்டும் உபதேசம் செய்யாமல் நாம் எல்லோரும் ஒன்றுகூடி நல்லவர்களாக மாற முடிவு செய்ய வேண்டும்.

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



**மஹா பெரியவா ஜெயந்தி அன்று (மே மாதம் 17, 2022) அன்று பெரியவா ஆற்றிய உரையின் சுருக்கம். ஸ்வராஜ்ய பிரஸ் கட்டிடத்தில் விழா நடந்தது.**

**ஸ்ருதி ஸ்ம்ருதி புராணானாம் ஆலயம் கருணாலயம்**
**நமாமி பகவத் பாத சங்கரம் லோக சங்கரம்**
**சதாசிவ சமாரம்பாம் சங்கராசார்ய மத்யமாம்**
**அஸ்மத் ஆச்சார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம்.**

இன்று நல்ல நாள். இன்று சாந்திரமானம் ப்ரகாரம், மஹா சுவாமிகள். அவர்களின் நக்ஷத்திரம் மற்றும் திதி ஒன்றாக வந்துள்ளது. இந்த புனித நாளில், அவர் சஞ்சாரம் செய்த இடத்தில் நீங்கள் இந்த உற்சவத்தை கொண்டாடுகின்றீர்கள்.

ஹைதராபாத் பாக்யா நகரில், இங்கேயே பெரியவாள் சாதுர்மாஸ்யம் செய்துள்ளார்கள். அதே போல் ஜெயேந்திர சுவாமிகள் இங்கே அநேக முறை வந்துள்ளார்கள். இங்கே வியாச பாரத சதஸ் நடந்தது. இங்கே பல தர்ம பிரச்சார காரியம் துவங்கப்பட்டது. வியாச பாரத கலா சதஸ், சில்ப கலா சதஸ் இங்கே நடைபெற்றது. வடக்கு பிரதேசத்தில் கடப்பாத்திரி சுவாமி பிரசித்தி பெற்ற ஸ்வாமி. அவர் காஞ்சி மகா ஸ்வாமிகளுக்கு நெருங்கியவர். பெரியவா என்றால் அவருக்கு பெரிய கௌரவம். அவர் ஸ்வதர்ம ஸ்வராஜ்யம் என்று ஒன்று ஆரம்பித்தார்.

இந்த தேசத்தில் ஸ்வதர்ம ஸ்வராஜ்யம் ஆரம்பித்து, அநேக சாஸ்திர பண்டிதர்கள், வ்யாகரணம், மீமாம்சா,

வேதாந்தம், வேதம் படித்தவர்கள் அனைவரையும் கௌரவித்த பின் தர்மப் பிரச்சாரம் இந்த பிரதேசத்தில் பெருகியது. டோங்க்ரி சாஸ்திரி மற்றும் அநேக பண்டிதர்களுக்கு வசதிகள் செய்து தந்தார்கள். இந்த மண்டபத்தில் அநேக சமுதாய பணிகள் துவங்கப்பட்டன. சந்திர மௌலீஸ்வர பூஜா அங்கே நடைபெற்றது.

அவர் எங்கே சென்றாலும், அந்த இடம் தங்கமாக மாறியது.

இந்த இடத்தில் சந்திர மௌளீஸ்வரர் பூஜை நடைபெற்று தீர்த்தப் பிரசாதம் தரப்பட்ட இடம், பிரவசனம் செய்த இடம், அநேக பக்தர்களுக்கு மார்க தரிசனம் தந்த இடம். நமது தேசத்தில் தர்ம பிரச்சாரத்திற்கு முக்கிய பங்கு கொண்ட இந்த இடத்தில், இன்று ஸ்வாமிகளின் ஜயந்தி மகோற்சவம் நன்றாக நடைபெற்றது. மஹா ஸ்வாமி சேவா சமிதியினர், மற்றும் கௌதா மனோகர் அவர்களின் மாப்பிள்ளை ஆகியோர் சேர்ந்து நல்ல காரியம் செய்துள்ளார்கள். சண்டி ஹோமம் இங்கு நன்கு பததி படி செய்கிறார்கள்.

தர்மம் என்பது நமது தேசத்திற்கு முக்கியம். அதிகாரம், வியாபாரம் நமது தேசத்தில் உள்ளது. ஆனால் நல்ல ஹிருதயம் தயார் செய்ய வேண்டும். **குரு சரணாம் புஜ நிர்பர பக்த:..... பவ முக்த:.**

சேந்திரிய மானஸ நியமம் என்பது பாரத விஸ்வாசம். மரியாதை, சிநேகம், பக்தி, ஸ்ரத்தை, வினயம் எல்லாம் நமது வாழ்க்கையில் முக்கியம். பணம், அதிகாரம், வியாபாரம் எல்லாம் அவசியம். அதனுடன் சதாசாரம் கூட முக்கியம் நமது பாரத தேசத்தில். அதனால் human values என்பது course அல்ல, இது நமது வாழ்க்கை. மூன்று வருஷ degree இல்லை, இரண்டு வருஷ post graduation கிடையாது. ஐந்து வருட Ph.d இல்லை. நமது தேசத்தில் human values என்பது முக்கியம், பிரதானம், பிராணம் படித்தவர்களுக்கு கூட. தர்மத்தில் ஒரு நம்பிக்கை. அதற்காக கஷ்டப்படுகிறார்கள், பிரார்த்தனை செய்கிறார்கள்.

குழந்தைகளுக்கு வேலை, வியாபாரம் என்று வேண்டிக் கொண்டாலும், அவர்கள் நன்றாக இருக்க வேண்டும், நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற பிரார்த்தனை செய்து கொள்கிறார்கள். கர்நாடகாவில் இருந்து வந்த ஒரு MP அவர்கள் காஞ்சியில் இருந்து கர்நாடகா சென்றவர்கள். அவர் தன் பூர்வீகத்தைப் பற்றி கூறினார். அவர்கள் பல வருடங்கள் முன் சென்றவர்கள். ஸ்வாமி அவர்களின் பூர்வீகம் கூட கர்நாடகம். ஐந்து ஆறு ஆச்சாரியர்கள் ஹோய்சலா கர்நாடகாவைச் சேர்ந்தவர்கள். பல வருடங்களாக தர்மப் பிரசாரம் செய்தவர்கள். கர்நாடக சங்கீதம் பற்றி பிரசாரம் செய்தார்கள்.

ஆச்சாரியராக தர்மப் பிரச்சாரம் செய்தார்கள். அந்தப் பரம்பரையில் வந்தவர் கோவிந்த தீக்ஷிதர். அவர் ராஜா பாடசாலை துவங்கினார்.

அந்தப் பரம்பரையில் வந்த மஹா பெரியவா அவர்கள் பத்து வயதில் இராம நாமத்தை ஜபித்துக் கொண்டு ஒரு திடமான சங்கல்பத்துடன் மயிலம் என்ற இடத்தில் அவர் நண்பருடன் நடந்து வந்து அப்பொழுது உள்ள காஞ்சி ஆச்சாரியாரை தரிசனம் செய்தார்கள். அந்த தரிசனம் மூலம், நாம் அனைவரும் பாக்கியம் பெற்றோம். ஸ்வாமி அவர்களின் குடும்பம் பல நூறாண்டுகளாக சமயம், சங்கீதம், சமுதாயம் என்று தொண்டு செய்த குடும்பம். அத்வைத பிரசாரம் செய்த குடும்பம்.

மஹா பெரியவா அவர்கள் எப்பொழுதும் ராம நாமம் ஜபித்துக் கொண்டு, சிறு வயதில் இருந்தே இருந்தார். அதுவே 87வருடம் வியாச பூஜை செய்ய சக்தி அளித்தது. இது சாதாரண விஷயம் இல்லை. ராம நாமத்தின் மீது இருந்த பக்தி, ஷ்ரத்தை அளவிட முடியாது. அவர் வாழ்க்கையை நாம் பார்த்தால் பத்து வருடத்திற்கு ஒரு முறை ஒரு புதிய project பார்க்க முடியும். சமுதாயம் நன்றாக இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனை, சங்கல்பம், செயல்கள் எல்லாம் மக்களுக்காக செய்தார். தர்ம யாத்திரை இருபத்தி ஒன்று வருடம் தொடர்ந்து செய்தார். தர்ம மூலம், சாஸ்திரம் காப்பாற்றப் படவேண்டும். அனைவர் மனத்திலும் தர்ம சிந்தனை எழுப்பினார். தன் மௌனம் மூலம் பல கற்பித்தார். உத்திர சிதம்பரம் கட்டினார். பசுக்கள் காப்பாற்ற பணிகள் செய்தார். எல்லோருக்கும் அனுக்ரஹம் செய்தார். எல்லோருக்கும் அபிமானம் காண்பித்தார். மஹா ஸ்வாமிகள் வாழ்ந்த காலத்தில் செய்த பணிகளை நாம் அளவிட முடியாது. இந்த பாக்யா நகரத்திலே இந்த ஜயந்தி விழாவை சிறப்பாக கொண்டாடிக் கொண்டிருக்கும் உங்கள் எல்லாருக்கும் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அருள் பரிபூரணமாக கிடைக்க ப்ரார்த்திக்கிறோம்.

# ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 5

**ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள்**

**பி. ஆர். கண்ணன்**

**ஒவ்வொரு வாக்யம் முடிந்தவுடன்**

**ஸ்ரீ சரணா: அனுக்ருண்ணந்து**

**என்று சிஷ்யர்கள் கூறுவது ஸ்ரீ மடத்து ஸம்ப்ரதாயம்.**

**மனோவ்யாபார அபாவஸமயே யத்ஸுகம் பாஸதே தத் ஸுகமாத்ம ஸ்வரூபமிதி ஆத்ம நிஸ்சய: ஸம்யக் பூயாத் ॥ 26**

*மனத்தின் வ்யாபாரம் இல்லாதபோது எந்த ஸுகம் ஒளிர்கிறதோ அந்த ஸ்வரூபம் ஆத்ம ஸ்வரூபம் என்ற நிச்சயம் சரியாக ஏற்படட்டும்.*

**ஸ்வப்ன: ஸ்வாதிரேகேண யதா நாஸ்தி ததைவ ஸ்வஜாக்ரதபி ஸ்வாதிரேகேண நாஸ்தி தேன அத்விதீயாத்மானுபவ ஸித்தி: ஸம்யக் பூயாத் ॥ 27**

*கனவு நிலை எப்படி பொய்யோ, நினைவு நிலையும் எப்படி பொய்யோ இதைப் பார்க்கும் அத்வைதானுபவ சித்தி நன்றாக ஏற்படட்டும். விளக்கம்:- மனதின் விகாரம் கனவு நிலை. அங்கு பொருள்கள் வரா. வரவும் முடியாது. ஒரு சின்ன மனத்தில் எப்படி பெரிய யானை வரமுடியும்? கனவு நிலையில் பல வருடங்கள் ஓடிவிடுகின்றன. எப்படி சாத்யம்? தூங்குபவன் கனவில் ஆசார்யரின் பூஜையை கண்டு களிக்கிறான். இவனோ இங்கிருக்கிறான். அவரோ எங்கேயோ இருக்கிறார். தூங்கி எழுந்தவுடன் கனவில் வந்த பொருள்கள் காணாமல் போய்விடுகின்றன. ஜாக்ரத் நிலையிலும் இப்படித்தான். இரண்டு நிலைகளும் ஒன்றை ஒன்று மறிக்கும். துரீய நிலையில் கனவும் ஜாக்ரத் நிலையும் போய் ஆத்ம ஸ்வரூபம் மட்டும் எஞ்சும்.*

**வாஸனாக்ஷயமனோ நாசாப்யாம் நிர்வாஸனே வ்ருத்தி சூன்யே சித்தே ஸம்சய விபர்யய தோஷத்வய அபாவேன உத்பன்னம் ப்ரஹ்மஞ்யானம் அபாதிதத்வேன ஸுரக்ஷிதம் பூயாத் ॥ 28 ॥**

*வாஸனைகள் ஒழிய மனம் நாசமுற, வ்ருத்தி ஞானம் போக ஐயமும் மாறுபாடு அறிவும் (தோஷங்கள்) ப்ரம்ம ஞானம் காக்கப்படட்டும்.*

பஞ்சம்யாதி பூமிகாத்ரயரூபாயாம் ஜீவன்முக்தஸம்பாத்யமானாயாம் தவிதபான அபாவேன ஸம்சய விபர்யய ப்ரஸங்காஅபாவாத் உத்பன்னம் தத்வஞ்யானம் அபாதித்வேன ஸுரக்ஷிதம் பூயாத் நச ॥ 29 ॥

*த்வைத பாவத்தோடு ஐயமும் மாறுபட்ட அறிவும் மறைய மூன்று பூமிகாய்களால் சூழப்பட்டதுமான ஜீவன்முக்தி நிலை நன்றாகக் காக்கப்படட்டும். விளக்கம் வாழ்க்கை ரிஷிகளால் ப்ரவ்ருத்தி மார்க்கம், நிவ்ருத்தி மார்க்கம், என்று காட்டப்பட்டுள்ளது. கர்மா, பக்தி, லோக, வ்யவஹாரம் இவை ப்ரவ்ருத்தி மார்க்கம், நிவ்ருத்தி மார்க்கம், மோக்ஷமார்க்கம். ப்ரவ்ருத்தி நிலையில் சித்த சுத்தி ஏற்பட்டபின் நிவ்ருத்தி மார்க்கம் ஏற்க்கப்படலாம். மோக்ஷமடைய யோக வாஸிஷ்டம் ஏழு பூமிகைகளைக் காண்பிக்கிறது. அவை 1 1 சுபேச்சை, 2 விசாரணை, 3 தனுமானஸம், 4. ஸதவ்பத்தி, 5. அஸம்சக்தி, 6. பதார்த்த அபாவனா, 7. துரீயம் சுபேச்சை நித்யா அனித்ய வஸ்து விவேகம். மோக்ஷமடைய அவா விசாரணை ஸத்குருவை அடைதல் உபனிஷத் வாக்யங்களை ஸ்ரவணம் செய்தல், மனனம் செய்தல், தனுமானஸம் நிதித்யாஸனம் ப்ரம்ம ஸ்வரூபத்தில் மனம் ஆழ்தல் முதல் மூன்று நிலையும் விழிகள் இறுதி நான்கு நிலைகளும் பலப்ராப்தி.*

*ஸத்வபத்தி ப்ரம்மஸாக்ஷாத்காரம் ஆஸம்சக்தி ப்ரம்ம நிலையிலிருந்து லோக வ்யாபாரத்திற்கு வருவது பதார்த்த ஆபாவனா ப்ரம்ம நிலையிலேயே ஆழ்ந்து இருத்தல், ஸமாதி நிலை கலையாதிருத்தல் மற்றவர்களால் ஸமாதி நிலை கலைக்கப்படும். துரீயம் உப்பு நீரில் கரைந்தால் எப்படியிருக்குமோ அப்படி இந்த நிலையிலேயே இருத்தல். இவனே ப்ரம்மவித்வரிஷ்டன்.*

*ப்ராணன் மட்டும் ப்ராரப்த கர்மா இருக்கும் வரையில் இயங்கும். இதை பகவத் கீதை கூறும் அத்யாயம் 6 ஸ்லோகம் 22*

***''யஸ்மின் ஸ்திதோ ந துக்கேன குருணாபி விசால்யதே''***

# ஸ்ரீமத் தேவி பாகவதம் -23

பி. ஆர். கண்ணன்

**விபூதி தாரணம்**



விபூதியை மூன்று பட்டைகளாக (த்ரிபுண்ட்ரம்) இட்டுக் கொள்ள வேண்டும். த்ரிபுண்ட்ரம் ப்ரம்மா, விஷ்ணு, சிவன்; அதுபோன்று ஓங்காரத்தின் அ, உ, ம என்ற அக்ஷரங்களையும் குறிக்கும். பஸ்மம் (விபூதி) மூன்று விதம். 1. சாந்திக்ருத் பஸ்மம் - சாணம் பசு மாட்டு சரீரத்திலிருந்து வெளிவரும் போதே எடுத்து, ஸத்யோஜாதம் முதலிய ப்ராம்ம மந்த்ரங்களுடன் தஹித்து செய்வது. 2. பௌஷ்டிகம் - சாணம் பூமியில் விழுமுன்னர் எடுத்து, ஷடங்க மந்த்ரங்களுடன் தஹித்து செய்வது. 3. காமதம்- ப்ராஸாத மந்த்ரங்களுடன் தஹித்து செய்வது. விரஜாக்னிஹோமம் பௌர்ணமியின் முதல் நாள் செய்து, அக்னியில் பஸ்மம் உண்டாக்குவது சிறந்தது. ஸ்ரௌதாக்னி, ஸ்மார்த்தாக்னி, லௌகிகாக்னி இம்மூன்றிலும் முந்தியது உயர்ந்தது. பிரம்மசாரிகளுக்கு ஸமிதாக்னியும், க்ருஹஸ்தர்களுக்கு ஔபாஸனாக்னியும் சிறந்தவை.

சரீரத்தின் எல்லா பாகங்களிலும் விபூதி பூசிக்கொள்ளுதல் ஆக்னேய ஸ்னானம் என்பதாகும். அக்னிரிதி பஸ்ம என்கிற ஆறு அதர்வண மந்த்ரங்களையோ, ஓம் நம: சிவாய, அல்லது த்ரயம்பக மந்த்ரத்தையோ சொல்லி சரீரத்தில் விபூதி பூசவும். நெற்றியில் த்ரிபுண்ட்ர விபூதி ப்ரம்மாவின் எழுத்தைக்கூட அழிக்கும். **பாஸநாத்பஸிதம் ப்ரோக்தம் பஸ்ம கல்மஷபக்ஷணாத் ந பூதிர்பூதிகரீ பும்ஸாம் ரக்ஷா ரக்ஷாகரீ புரா ॥** விபூதி ப்ரகாசிப்பதால் பஸிதம் என்றும், தோஷங்களைத் தின்றுவிடுவதால் பஸ்மம் என்றும், ஐஸ்வர்யத்தை அளிப்பதால் பூதி (விபூதி) என்றும், அணிபவரை எப்போதும் காப்பதால் ரக்ஷா என்றும் பெயர் பெற்றுள்ளது.

ஒருசமயம் துர்வாஸ மஹரிஷி பித்ருலோகம் சென்று, பித்ருதேவதைகளுடன் பேசும்போது, பெரும் அழுகைக்குரல் கேட்டது. அது கும்பீபாக நரகத்தில் கஷ்டப்படுபவர்களின் குரல் என்று தெரிந்துகொண்ட அவர், நேரே கும்பீபாக குண்டத்தில் சென்று எட்டிப்பார்த்தார். அடுத்த க்ஷணம், அங்கிருந்த பாபிகள் எல்லோரும் சந்தோஷம் தாங்காமல் சிரிப்பும், பாட்டும், நாட்டியமுமாக ஆனந்தத்தில் மிதந்தனர். உடனே யமன், ப்ரம்மா, விஷ்ணு, தேவேந்த்ரன் எல்லோரும் இந்த ஆச்சரியத்தைக் காண வந்தனர். தேவர்கள், ஸ்வர்க்கத்தைவிட இந்த நரகத்தில் சுகம் அதிகமாகயிருப்பதைக் கண்டு, இனி பாபபயம் எவ்வாறு நீடிக்கும் என்று பயந்தனர். விஷ்ணு தேவர்களுடன் சிவனிடம் சென்றார். சிவன், இந்த நிகழ்வு துர்வாஸரின் நெற்றியின் விபூதித்துகள்கள் கீழே விழுந்ததனால் ஏற்பட்ட ப்ரபாவம் என்று தெரிவித்தார். கும்பீபாகத்தில் இருந்த ஜீவர்கள் விமானத்தில் கைலாஸம் சென்றனர். அந்த இடம் பித்ருதீர்த்தம் என்று பெயர் பெற்றது; அங்கு சிவலிங்கமும், தேவியின் மூர்த்தியும் ஸ்தாபித்தார்கள். கும்பீபாக நரகம் வேறிடத்திற்கு மாற்றப்பட்டது.

ஊர்த்வபுண்ட்ரம் தரிப்பவர்கள், அதற்கு வேண்டிய மண்ணை நதிக்கரை, பர்வத உச்சி, துளசிச்செடியின் அடிப்பாகம், சிவக்ஷேத்ரம் ஆகிய விசேஷ இடங்களிலிருந்து எடுத்து உபயோகிக்க வேண்டும். பகவானின்12 நாமாக்களைச் சொல்லி, சரீரத்தின் 12 இடங்களில் புண்ட்ரதாரணம் செய்ய வேண்டும்.

**ஸந்த்யாவந்தனம்**

காலையில் நக்ஷத்ரங்கள் இருக்கும்போதே ஸந்த்யாவந்தனம் செய்ய வேண்டும். மத்யானத்தில் சூர்யன் உச்சியிலும், மாலையில் சூர்யன் அஸ்தமிக்குமுன்னரே, இதைச் செய்ய வேண்டும். ஸந்த்யாவந்தனம் செய்யாமல் வேறு எந்த புண்யகர்மா செய்தாலும் யாதொரு பயனையும் அளிக்காது.

**விப்ரோ வ்ருக்ஷோ மூலகாந்யத்ர ஸந்த்யா வேதா: ஸாகா தர்மகர்மாணி பத்ரம் ।**
**தஸ்மாந்மூலம் யத்நதோ ரக்ஷணீயம் சிந்நே மூலே நைவ வ்ருக்ஷோ ந ஸாகா ।।**

ப்ராம்மணன் மரமென்றால், ஸந்த்யாவந்தனம்தான் அந்த மரத்திற்கு வேர்; வேதங்களே கிளைகள்; தர்மகர்மாக்கள் இலைகள். ஆகையால் வேராகிய ஸந்த்யாவந்தனத்தை முயற்சியுடன் காக்க வேண்டும். வேர் அழிந்தால் மரமோ, கிளைகளோ இருக்கப்போவதில்லை. ஸந்த்யா வந்தனத்தை வீட்டில் செய்தால் ஸாதாரண பலனும், கோசாலையில் சிறிது உயர்ந்த பலனும், நதிக்கரையில் உத்தமமான பலனும், கோவிலில் அத்யுத்தம பலனும் கிடைக்கும். தேவி ஸந்நிதியில் செய்தால் விசேஷ பலன். ஸந்த்யா வந்தனத்தின் ப்ரதான பலன் சித்தசுத்தி.

தேவிபாகவதத்தில் சொல்லப்பட்டுள்ள ஸந்த்யாவிதானம் வெகுவிஸ்தாரமானது. ஆசமனம் செய்கையில் சரீரத்தின் 24 இடங்களில் ஸ்பர்சம், ப்ரம்மசாபம், விஸ்வாமித்ரசாபம், வஸிஷ்டசாபம் நிவர்த்தி, அங்கந்யாஸம், கரந்யாஸம், அக்ஷரந்யாஸம், 24 முத்ரைகள். பஞ்சபூஜை ஜலம் முதலிய) முதலிய பல விஷயங்கள் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன. நாம் விடும் அர்க்யத்தின் ஜலம் எவ்வாறு மந்தேஹர் என்ற 30 கோடி ராக்ஷஸர்களை வஜ்ரமாகமாறி விரட்டிவிடுகிறது என்பதைத் தெரிவிக்கிறது.

**காயத்ரிமந்த்ரம்**

காயத்ரிஜபம் ஆரம்பிக்கையில், முதலில் காயத்ரி மந்த்ரத்துடன் த்ர்யம்பகம் யஜாமஹே ..., ஜாதவேதஸே.....துரிதாத்யக்னிঃ, என்ற மந்த்ரங்களையும் சேர்த்துச் சொன்னால் சதாக்ஷர (100 அக்ஷர) காயத்ரி ஆகும்; ஒருதடவை இதை ஜபித்து, பின்னர் காயத்ரிஜபத்தைத் தொடர்தல் விசேஷம். காயத்ரி மந்த்ரத்தின் துரீய (நான்காம்) பாதமான 'பரோரஜஸே ஸாவதோம்' என்ற மந்த்ரத்தை உபதேசம் பெற்று ஜபித்தல் சிறந்தது.

காயத்ரி மந்த்ர புரஸ்சரணம் செய்யும் விதானத்தை உபதேசிக்கிறது இக்க்ரந்தம். பூஜையுடன் தொடங்கி, அக்ஷரலக்ஷம், அதாவது, 24 அக்ஷரங்களுக்கு 24 லக்ஷம் மந்த்ரஜபம் செய்து, தசாம்சஹோமம் செய்தால் புரஸ்சரணம் பூர்த்தியாகும். ஜபகாலத்தில் வ்ரதானுஷ்டானம் முக்கியம். வித்யாரண்ய ஸ்வாமிகள் காயத்ரி புரஸ்சரணம் செய்து, காயத்ரி தேவி தர்சனம் அடைந்தார்; துர்பிக்ஷத்தின்போது தங்கக்காசு மழை கிடைக்கப் பெற்றார்.

ஜலத்தில் முழங்கால்வரை நின்று காயத்ரி ஜபம் செய்தால் தோஷசாந்தி ஏற்படும்; கழுத்துவரை நின்று ஜபித்தால் பயமுக்தி கிடைக்கும். ஜலகும்பத்தில் மந்த்ரஜபம் செய்து ப்ரயோகித்தால் ரோகநிவாரண பலனுண்டு. அதேபோல அக்னியில் காயத்ரிமந்த்ர ஹோமம் செய்தால், பலவிதமான ஸமித்துகளுக்கு பலவிதமான ரோகநிவ்ருத்தி பலன் கிடைக்கும். விபூதியை காயத்ரிமந்த்ரத்தினால் மந்த்ரித்து தரித்தால் வ்யாதி நீக்கம் உண்டு.

வேதோக்தமான நித்யகர்மாக்களைச் செய்யும்படி வற்புறுத்துகிறது க்ரந்தம். ஔபாஸனம், தர்சபூர்ண ஸ்தாலீபாகம், அக்னிஹோத்ரம், வேதாத்யயனம், வேத அத்யாபனம் முதலிய கர்மாக்களுடன் பஞ்சாயதனபூஜை செய்யவேண்டும். தேவி பஞ்சாயதனத்தில் தேவி நடுவிலும், சிவன், விஷ்ணு, கணபதி, சூர்யன் நான்கு

*கோணங்களிலும் வைத்துப் பூஜை. தேவி எல்லாவற்றையும் அனுக்ரகிப்பாள். இதன்பிறகு, தொழில் சம்பந்தமான வேலையைச் செய்யலாம். மாத்யான்னிகம், ப்ரம்மயக்ஞம், பலிவைஸ்வதேவம், பஞ்சமகாயக்ஞங்கள் செய்ய வேண்டும்.* ***பஞ்சஸூநா க்ருஹஸ்தஸ்ய சுல்லீ பேஷண்யுபஸ்கர: । கண்டணீ சோதகும்பஸ்ச தேஷாம் பாபஸ்ய ஸாந்தயே ।।*** *அடுப்பு, அம்மி, துடைப்பம், உலக்கை, ஜலத்தவலை முதலியவற்றினால் ஏற்படும் ஜீவமரணத்திற்குப் ப்ராயஸ்சித்தமாக பலி வைஸ்வதேவம் விதிக்கப்பட்டுள்ளது. அதிதியக்ஞம், பூதயக்ஞம் எல்லாம் செய்து போஜனம் செய்யும்போது பரிஷேசனம் என்கிற ப்ராணாக்னிஹோமம் செய்யவேண்டும். பிறகு புராணபடனம், ஸாயம்ஸந்த்யை மற்றும் இதர கர்மாக்களைச் செய்யவேண்டும். ப்ருஹத்ரதன் என்ற ராஜா காசியில் பூர்வஜன்மத்தில் சக்ரவாகபக்ஷியாக இருந்து, அன்னபூர்ணாதேவியைப் ப்ரதக்ஷிணம் செய்ததன் பயனாக, இரண்டு கல்பம் ஸ்வர்க்கத்தில் வாஸம் செய்து, பிறகு காசி ராஜாவாக ஆனான். பெரிய தர்மிஷ்டனாக இருந்த அவன், பூர்வஜன்மஸ்மரனையுடன் இருந்ததைக்கண்டு ரிஷிகளே ஆச்சர்யமடைந்தனர்.*

*ப்ராயஸ்சித்த வ்ரதங்களை வர்ணிக்கையில், க்ருச்ர, ப்ராஜாபத்ய, ஸாந்தபன, பராக, சாந்த்ராயண வ்ரத விவரங்களை வர்ணிக்கிறார்கள்.*

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

## சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# முகாம் நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி



10.05.22 - ஸ்கந்தகிரியிலிருந்து சுமார் 50 கி.மீ தூரத்தில் இருக்கும் வர்கல் என்ற கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சரஸ்வதி கோவிலுக்கு 10.5.22 நவமியன்று விஜயம் செய்தார்கள். காஞ்சி காமகோடி பீடத்தின் ஆசியுடன் நடத்தப்படும் இக்கோவிலில், சரஸ்வதி, ஸ்கந்தர் மற்றும் வெங்கடேச்வரஸ்வாமி சந்நிதிகள் உள்ளன. கோவில் நிர்வாகம் மூலமாக ஒரு ஸ்மார்த்த வேத பாடசாலையும் நடந்து வருகிறது. இதுவரை சுமார் 175 வேத பண்டிதர்களும், புரோஹிதர்களும் இந்த பாடசாலையில் படித்து இருக்கிறார்கள். இந்தக் கோவிலில் குழந்தைகளுக்கு அக்ஷராப்யாஸம் செய்விப்பது விசேஷமாக கருதப்படுகிறது. ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் தனது அனுக்ரஹ பாஷணத்தில் சரஸ்வதி தேவியைப் பற்றிய வேத மந்திரங்கள் தியான ஸ்லோகங்கள் எடுத்து கூறி, இந்த கோவில் சரஸ்வதி தேவி க்ஷேத்திரமாக விளங்குவதாக கூறினார்.

11.5.22 - இன்று மாலை ஹைதராபாத் பேகம்பட்டில் இருக்கும் புஷ்பகிரி மடத்திற்கு விஜயம் செய்தார்கள். அங்குள்ள சிவன் கோவில், பூஜா கிருஹம், கோசாலை முதலியவைகளை பார்வையிட்டார்கள். பிறகு இரண்டு ஆசார்யர்களும் பங்கேற்ற ஸ்வாகத சபா நடந்தது. வேத படனம், ஸ்வஸ்திவாசனம் முதலியவைகளோடு ஆரம்பித்த சபாவில் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் பாரம்பரியமான மரியாதையுடன், தெலுங்கு மற்றும் சமஸ்கிருதம் பாஷைகளில் ஸ்வாகத பத்ரம் வாசித்து வரவேற்கப்பட்டார்கள்.

தனது அனுக்ரஹ பாஷணத்தில் இரண்டு மடங்களுக்கு இடையே இருக்கும் நீண்ட தொடர்பை வலியுறுத்தி பரஸ்பத ப்ரீதி, லோக ப்ரீதி பற்றியும் விவரித்தார்கள். புஷ்பகிரி ஸ்வாமிகள், ஸ்ரீ ஆச்சார்யாள் அனுக்ரஹ பாஷணத்தை விவரித்து தன்னுடைய உளமார்ந்த சந்தோஷத்தை தெரிவித்தார்கள்.

*12.5.22 - ஸ்கந்தகிரியிலிருந்து சுமார் 60 கி.மீ. தூரத்தில் இருக்கும் யாதகிரிகட்டா என்ற இடத்தில் இருக்கும் நரசிம்மஸ்வாமி கோவிலுக்கு ஏகாதசி அன்று விஜயம் செய்து வழிபட்டார்கள். மிகவும் புராதனமாக இந்த கோவிலை பழமை மாறாமல் சில்ப சாஸ்திரப்படி நான்கு கோபுரத்துடன் முழுவதும் கற்களால் புதுப்பித்துள்ளார்கள். நரசிம்ம ஸ்வாமியின் பல்வேறு வடிவங்கள் பிரதான கோவிலின் முன்புறம் அமைக்கப்பட்டுள்ளது பிரம்மாண்டமாக இருக்கறது. ஸ்ரீ கணபதி ஸ்தபதியுடன் இந்தக் கோவிலுக்கு 1988ம் வருஷம் விஜயம் செய்துள்ளார்கள். தற்சமயம் கோவில் தலைவர், செயல் அலுவலர் மற்றும் பூஜகர்கள் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளை வரவேற்றார்கள்.*

*புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ள சிவன் கோவிலுக்கு விஜயம் செய்து அபிஷேகம் செய்தார்கள். ஹைதராபாத்திலிருந்து ஏராளமான பக்தர்களும் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளுடன் சென்றிருந்தார்கள்.*

*14.5.22 - சனிக்கிழமை அன்று மாலையில் ஸ்ரீ மடத்தில் நரசிம்ம ஜயந்தி பூஜா மாலையில் நடைபெற்றது. ஸ்ரீ நரசிம்மர் அவதார கட்டம், நரசிம்ம பஞ்சரத்னம் மற்றும் கராவலம்ப ஸ்தோத்ரம் பாராயணம் செய்யபட்டது.*

*18.5.22 - ஸ்கந்தகிரி கோவில் மண்டபத்தில் நடைபெற்ற சிவாசார்யார்கள் சபாவிற்கு தலைமை தாங்கி நடத்தி வைத்தார்.*

*20.5.22 - ஸெகநத்ராபாத் ரயில் நிலையத்தின் அருகில் இருக்கும் கணேஷ் மந்திருக்கு இன்று காலை விஜயம் செய்தார்கள். தெலுங்கானா அறநிலையத்துறை அதிகாரிகள் மற்றும் அர்ச்சகர்களால் வரவேற்கப்பட்டு கோவிலில் விசேஷ பூஜைகள் நடைபெற்றன.*

*ஸம்ஸ்கிருத பாஷையில் புனையப்பட்டிருக்கும் ''குரு க்ருபா லஹரி'' என்ற ஸ்லோகங்களை ஸ்ரீமதி சுதா மற்றும் அவருடைய வித்யார்த்திகள் பாடினார்கள். கன்யா பூஜை, தீப பூஜா முதலியவை நடைபெற்றன. விஜயவாடா கனக துர்கா கோவில் ஸ்தானாசார்ய ஸ்ரீ சிவப்ரஸாத் சர்மா தம்பதிகளால் துவக்கப்பட்டுள்ள பெண் குழந்தைகளின் பயிற்சிக்கான ஒரு இணையதளத்தையும் ஆசிர்வதித்தார்கள்.*

**இதர விசேஷங்கள்:**

இந்த முகாமில் ஹைதராபாத்தில் பல்வேறு இடங்களுக்கு விஜயம் செய்தார்கள்.


ஸ்ரீ சந்திரமௌளலீஸ்வரா என்ற பெயரில் அமைந்திருக்கும் ஒரு பாடசாலை கட்டிடம் ஸ்ரீமடத்திற்கு சமர்ப்பணம் செய்யப்பட்டது.

குந்தலூரில் ஜனார்தன ஸ்வாமி பெயரில் நடத்தும் வேதபாடசாலைக்கு விஜயம் செய்து அனுக்ரஹித்தார்கள். ஜனார்தன ஸ்வாமி என்பவர் ஸ்ரீ மஹா ஸ்வாமிகளால் சந்நியாச தீக்ஷை பெற்று வேததர்ம வேத அனுஷ்டானம் பற்றி தீவிர ப்ரசாரம் செய்பவர்.

வேதம், கலாசாரம், கலை, அறிவியல், மனிதேயம் முதலியவைகளை அபிவிருத்தி செய்ய Focus Organization ஆசீர்வதித்தார்கள்.

வேறு பல கோவில்களுக்கும் மற்றும் ஸ்ரீமடம் பக்தர்கள் இல்லங்களுக்கும் விஜயம் செய்து ஆசீர்வதித்தார்கள்.

ஸ்ரீ சந்திரமௌளலீஸ்வராய நம:



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**

ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# ஆனி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 15-06-2022 | புதன் | மூலம் வேத பாராயணம் |
| 16-06-2022 | வியாழன் | உத்ராடம் தேர் |
| 17-06-2022 | வெள்ளி | உத்ராடம் வேத பாராயணம் |
| 18-06-2022 | சனி | அவிட்டம் வேத பாராயணம் அவிட்டம் தேர் |
| 24-06-2022 | வெள்ளி | ஏகாதசி |
| 25-06-2022 | சனி | த்வாதசி |
| 26-06-2022 | ஞாயிறு | ப்ரேதாஷ பூஜை |
| 06-07-2022 | திங்கள் | ஆனி திருமஞ்சனம் |
| 09-07-2022 | சனி | ஸ்வாதி வேத பாராயணம் |
| 10-07-2022 | ஞாயிறு | அனுஷம் வேத பாராயணம், அனுஷம் தேர் சாதுர்மாஸ்யாரம்பம் ஏகாதசி |
| 11-07-2022 | திங்கள் | த்வாதசி, ப்ரேதாஷ பூஜை |
| 12-07-2022 | செவ்வாய் | மூலம் வேத பாராயணம் மூலம் தேர் |
| 13-07-2022 | புதன் | பௌர்ணமி பூஜா, வியாச பூஜா |
| 14-07-2022 | வியாழன் | உத்ராடம் வேத பாராயணம் உத்ராடம் தேர் |
| 15-07-2022 | வெள்ளி | அவிட்டம் தேர் |
| 16-07-2022 | சனி | அவிட்டம் வேத பாராயணம் தக்ஷிணாயன புண்யகாலம் |
| 17-06-2022, 24-06-2022, 01-07-2022, 08-07-2022, 15-07-2022 வெள்ளிக்கிழமை பூஜை | | |

# சாணக்ய ஸுபாஷிதம்

*ஸுபாஷிதம் என்னும் வட சொல்லுக்கு நன்றாகச் சொல்லப்பட்டது என்று பொருள். ஈரடியில் செறிவான கருத்தை குறள் போல் சொல்லும். வடமொழி இலக்கியத்தில் ப்ரஸித்தி பெற்றது. சாணக்யர் தனது அர்த்த சாஸ்த்ரம் தவிர இம்மாதிரி நீதி நூல்கள் அருளியிருப்பதாக சொல்வர். அவைகளில் ஒரு நீதி ஸுபாஷிதத்தைத் தருகிறோம். ஸுபாஷிதங்கள் எல்லாமே நறுக்கென்று இருக்கும்,ஸ்வாரஸ்யமாக சொல்லப்படும். புதுப்பெரியவருக்குப் பிடித்தமானது.*

**தொடக்கம்**

**ப்ரணம்ய சிரஸா விஷ்ணும் த்ரைலோக்யாதிபதிம் ப்ரபும்**
**நானாசாஸ்தாத் உத்ருதம் வக்ஷ்யே ராஜ நீதி ஸமுச்சயம்। 1**

*த்ரிலோக்ய அதிபதியும் ப்ரபுவுமான விஷ்ணுவை வணங்கி பல சாஸ்த்ரங்களிலிருந்து எடுத்த நீதி சாஸ்தத்தை சொல்வேன்.*

**ததஹம் ப்ரவக்ஷ்யாமி லோகானாம் ஹிதகாமாய**
**யஸ்ய விக்யான மாத்ரேண ஸர்வக்யம் ப்ரபத்யே 2**

*லோகத்திற்கு ஹிதம் செய்ய எதை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகுமோ அப்படிப்பட்ட நீதியை சொல்லுவேன்.*

**யததீத்ய யதாசாஸ்த்ரம் நரோ ஜானாதி ஸத்தம:**
**தர்மோபதேச விக்யாதம் காரயாகார்யம் ஸுபாஸுபம் 3**

*இந்த சாஸ்த்ரதைப் படிப்பவன் சாத்திரத்தின் உண்மையை அறிவான். தர்மோபதேசத்துடன் இருப்பதும், செய்யவேண்டியது விடவேண்டியது சுபம் அசுபம் இவற்றை அறிவான்.*

**2 மெய்ஞானம்**

**விப்ரோ வ்ருக்ஷ: தஸ்ய மூலம் ஸந்த்யா வேதா: சாகா தர்ம கர்மாணி பத்ரம்**
**தஸ்மாத் மூலம் யத்னதோ ரக்ஷணீயம் சின்னே மூலே நைவ சாகா ந பத்ரம் 1**

*அந்தணன் ஒரு மரம். அதன் மூலம் ஸந்தயை. வேதங்கள் கிளைகள். தர்மமும் கர்மங்களும் இலைகள். அதனால் எப்பாடுபட்டாவது மூலமான அந்தணனைக் காக்கவும். மூலம் போனால் கிளையுமில்லை, இலையுமில்லை.*

## விஷ்ணு பாத ஸேவனம்

**கா சிந்தா மம ஜீவனே யதி ஹரிர்விஸ்வம்பரோ கீயதே**
**நோ சேத் அர்பக ஜீவனாய ஜனனீஸ்தன்யம் கதம் நிஸ்ஸரேத்**
**இத்யாலோச்ய முஹுர்முஹுர் யதுபதே லக்ஷ்மீபதே கேவலம்**
**த்வத்பாதாம்புஜ ஸேவனேன ஸததம் காலோ மயா யாப்யதே 2**

*எனெக்கென்ன கவலை? யதுதிலகன் பரிபாலனம் செய்கையில்!அப்படி இலையெனில் குழவிக்கு தனத்திலிருந்து பால் சுரக்குமா? இதை நினைந்து நினைந்து யது திலகமே லக்ஷ்மீபதியே உன் பாத ஸேவையில் என் பொழுதைக் கழிக்கிறேன்.*

## ஸ்ரத்தை

**அக்னிஹோத்ரம் வினா வேதா ந ச தானம் வினா க்ரியா**
**ந பாவேன வினா ஸித்தீஸ்தஸ்மாத் பாவோ ஹி காரணம் 3**

*அக்னி வழிபாடு இல்லையெனில் வேதம் வீண் தானம் இல்லையேல் கர்மங்கள் வீண். ஸ்ரத்தையில்லாமல் ஸித்தி. ஸ்ரத்தையே முக்ய காரணம்.*

## ஸர்வ வ்யாபி

**அக்னிர்தேவோ த்விஜாதீனாம் முனீனாம் ஹ்ருதி தைவதம்**
**ப்ரதிமா ஸ்வல்பத்தீனாம் ஸர்வத்ர ஸமதர்சினாம். 4**

*இருபிறப்பாளர்களுக்கு அக்னிதான் தேவதை. முனிவர்களுக்கு மனதில் தெய்வம். மந்தபுத்திகளுக்கு விக்ரஹம் கடவுள், ஸமதர்சிகளுக்கு பார்க்கும் எல்லாம் தெய்வம்.*

## அன்பு

**யஸ்ய சித்தம் த்ரவீபூதம் க்ருபயா ஸர்வ ஜந்துஷு**
**தஸ்ய ஞ்யானேன மோக்ஷேண கிம் ஜடாபஸ்மலேபனை: 5**

*எந்த ஜந்துவிடமும் எவருக்கு உளம் கசிந்து உருகுமோ அவருக்கு ஞ்யானமென்ன? மோட்சமென்ன? நீட்டல் மழித்தலென்ன ?*

**காருண்யம்**

**சாந்திதுல்யம் தபோ நாஸ்தி ந ஸந்தோஷாத்பரம் ஸுகம்**

**ந த்ருஷ்ணாயா;பரோ வ்யாதி: ந ச தர்மோ தயாபர: 6**

*சாந்திக்கு ஸமம் தவமில்லை, த்ருப்திக்கு ஸமம் ஸுகமில்லை ஆசைக்கு ஸமம் வ்யாதி இல்லை காருண்யத்திற்கு மேல் எந்த அறமுமில்லை.*

**உனக்குச் சமம் யார்?**

**காஷ்டம் கலபதரு: ஸுமேருரசலஸ்சிந்தாமணி:ப்ரஸ்தர:**

**ஸூர்யாஸ்தீவ்ரகர; சசீ க்ஷயகர: க்ஷாரோ ஹி வாராம் நிதி:**

**காமோ நஷ்டதனுர்பலிர்திதிஸுதோ நித்யம் பசு: கானகௌ**

**நைதாஸ்தே துலயாமி போ ரகுபதே கஸ்யோபமா க்ஷீயதே 7**

*கல்பக மரம் வெறும் மரம். மேரு மலை அசையாது, சிந்தாமணியும் வெறும்கல் காமனோ அனங்கன், பலியோ தைத்யன், காமதேனுவோ வெறும் பசு, இவைகளில் ஏதேனும் உனக்குச் சமமாகுமா ரகுபதியே?*


இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய

(Reprint or Letterpress Books)

**ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு,** etc.

ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை

புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.

(Without Re-typeing, no proof reading)

விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore, Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**

We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages. Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc. Contact above address.

# பகவத் பாதரும் ஸங்கீத ஞானமும்

ஶ்ரீ:

ஶ்ரீ குருப்யோ நம :

ஸ்ரீ

विपञ्च्या गायन्ती विविघमपदानं पशुपते :
त्वयारब्धे वक्तुं चलितशिरसा साघुवचने ।
तदीयैर्माघुर्यैरपलपिततन्तीकलरवां
निजां वीणां वाणी निचुलयति चोलेन निभृतम् ।।

பெரிய துறவியாகவும், ஞானியாகவும், எல்லா வகைச் சுகங்களையும் ஒழித்தவராகவும் வாழ்க்கையை நடத்திய ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளுக்கு ஸங்கீதத்தில் ஆழ்ந்த ஞானம் இருப்பதற்கு யாதொரு காரணமும் இல்லை என்றே நாம் நினைக்கக் கூடும். ஆனால் அவர் அருளிய ஸ்தோத்திர ரத்தினமான ஸௌந்தர்யலஹரியில், தமக்குள்ள ஸங்கீதஞானம், ராஸிக்யம் முழுவதையும் நன்கு வெளிப்படுத்தியிருக்கிறார். காவியரஸம் ததும்புகிற இந்த நூ-ல் ஸங்கீத நுட்பத்தையும் நன்கு தெளிவுபடுத்தியிருக்கிறார். இந்த நூலைப் படித்து ரஸித்தால் பெரிய ஸங்கீத ரஸிகர் என்றே நாம் ஆசார்யரைக் கொண்டாட முடியும். அதிலுள்ள இரண்டு ச்லோகங்களை இப்பொழுது பார்ப்போம்.

தேவியை ஸங்கீத ரஸிகை என்றும், கானலோலுபை என்றும் ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரத்தில் வாக்வாதிநீ தேவதைகள் வர்ணித்திருக்கிறார்கள். பதிவிரதைகளுக் கெல்லாம் எடுத்துக்காட்டாக இருக்கும் தேவி, சிவபெருமானுடைய புகழ் வாய்ந்த சரித்திரங்களை மற்றொருவர் கானம் பண்ணும்போது மிகவும் ஈடுபடுகிறாள் என்பதை மனக்கண்ணால் பார்க்கிறார் ஸ்ரீ சங்கரபகவத்பாதர். ஸரஸ்வதியும் லக்ஷ்மியும் தேவியை ஹேவிப்பதையும் கர்ணகிறார். அவ்வாறு அம்பாளைஸேவிக்கும் போது, பசுபதியான பரமேச்வரனுடைய உயர்ந்த சரித்திரங்களை ஸரஸ்வதி வீணையில் கானம் செய்ய, அம்பாள் அதைக் கேட்டு ஆனந்தித்து, "ஸாது" அதாவது 'நன்றாக இருக்கிறது' என்று தலையசைத்துச் சொல்ல ஆரம்பிக்கும் போது 'ஸா' என்ற அக்ஷரத்தை, தன்னுடைய ஒப்பற்ற இனிமையான குர-ல் உச்சரிக்கிறாள். அதைக் கேட்ட ஸரஸ்வதி, தன் வீணையினின்று ஒ-த்த ஸங்கீதத்தின் பெருமையை, அம்பாளின் 'ஸா' என்ற சொல்--ருந்துஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

விபஞ்சீ என்று ப்ரஸித்தி பெற்ற தன்னுடைய வீணையினால், சிவபெருமானுடைய திரிபுர விஜயம், ஹாலாஹலத்தை உட்கொள்ளுதல் போன்ற பல வகையான, கீர்த்தி வாய்ந்த செய்கைகளை ஸரஸ்வதி கானம் செய்கிறாள். அதைக் கேட்டு ஸாது என்று சொல்லுவதற்காக 'ஸா' என்று தேவி ஆரம்பித்த பொழுதே அந்தக் குரலழகின் இனிமை, தன்னுடைய வீணையின் அழகான சப்தத்துக்கு மேல் இனிப்பதைக் கவனித்த ஸரஸ்வதி தன் வீணையைப் பைக்குள் போட்டுவிட்டாள் என்கிறார் ஆசார்யர்.

ஸாது என்ற சொல்-லுள்ள 'ஸா' என்பது ஸங்கீதத்தின் அடிப்படையான ஸ,ரி,க,ம,ப,த,நி என்ற ஸப்த ஸ்வரங்களில் முதல் ஸ்வரமாக அமைந்திருக்கிறது. தேவியின் வெகு இனிமையான குரல் சுத்தமான அந்த ஸ என்ற ஸ்வரத்தை உச்சரிக்கும் போத, ஸங்கீத தேவதையான ஸரஸ்வதியின் உள்ளம் அந்த ஸ்வர ரஸத்தில் மூழ்கி மகிழ்ச்சி அடைந்துவிட்டது. ஸங்கீத சாஸ்திரத்தில் 'ஸ்வரம்' என்பதற்கு, 'स्वयं

रञ्जयति इति स्वर:' என்று நிஷ்பத்தி சொல்-யிருக்கிறார்கள். ஒரு ஸ்வரமே கேட்போர் மனத்தைக் கவர்ந்துவிடும் என்பது இதன் கருத்து. நல்ல குரலும் நல்ல ஸங்கீத ஞானமும் உள்ளவர்களின் ஸ்வர உச்சரிப்புக்கு மனத்தைக் கவரக்கூடிய சக்தி பூர்ணமாக உண்டு என்பது ஸங்கீதப் பேரறிஞர்களுடைய தீர்மானம்.

தென்னாட்டின் ஸங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ தியாக ப்ரஹ்மம், தமது கீர்த்தனம் ஒன்றில், ஸ்வர ஸங்கீத ஸுதா ரஸயுக்த பக்தி என்று பாடியிருக்கிறார். அதில், ஸ்வரம், ஸங்கீதம், அதனுடைய ஸுதாரஸம் என்று சொல்லுகிறார். ஸ்வரத்தினால் ஏற்பட்டதுதான் ஸங்கீதம் என்று இருக்கும்போத, ஸ்வரம் என்பதைத் தனியாகச் சொல்வதன் அவசியம் கவனத்துக்குரியது. ஸ்வர உச்சரிப்புக்கே ஸுதாரஸம் தனிமையாக உண்டு என்பதனால்தான் இந்தப் பெரியாரும் இந்த உண்மையை விளக்கியிருக்கிறார்.

சென்ற மார்கழி மாதம் நடந்த சென்னை வித்வத் ஸபையினுடைய அத்ய க்ஷகராக இருந்த, 'ஸங்கீதகலாநிதி' பிருதம் பெற்ற ஸ்ரீ T.K.ஜயராம ஐயரவர்கள், ராகஸ்வரூபம் என்பது பற்றி ஓர் அழகான சொற்பொழிவாற்றினார். அதில் ஸ்வர மஹிமையைப்பற்றி நன்கு விளக்கினார். ஒரு ஸ்வரத்தை அப்பழுக்கில்லாமல் உச்சரித்தால் அது ஸஹ்ருதயர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்துவிடும் என்கிற உறுதியை எடுத்துக் கூறினார். இதற்கு உதாரணமாக, 1937-ஆம் வருஷத்தில் J. Healifist என்ற சிறந்த வய-ன் வித்வானுடைய பெருமையை விளக்கும்படியான என்ற 'They Shall have Music' தலைப்புள்ள ஒரு சினிமாப் படத்தைத் தாம் பார்த்ததாகவும், அவனுடைய வில்-னால் வய-ன் வாத்தியத்தில் ஒரு ஸ்வரத்தை ஒழுத்தபொழுது தமக்கு அதனால் ஏற்பட்ட மனக்கவர்ச்சியைத் தெரிவித்தார். இந்தச் சொற்பொழிவைக் கேட்டபோது, தேவியின் இனிமையான குரலைப்பற்றி வர்ணிக்கும் ஸ்ரீ சங்கரபகவத்பாதர், அதிசயோக்தியினாலோ, வெறும் மனோபாவத்தினாலோ மாத்திரம் இந்த ச்லோகத்தில் இதை உரைக்கவில்லை ; பூர்ணமான ஸங்கீத ஞான அநுபவத்தினால்தான் 'ஸா' என்ற அக்ஷரத்தினுடைய உச்சாரணத்தின் பெருமையை வர்ணித்தார் என்று அறிய முடிகிறது. மேனாட்டு ஸங்கீதப் பேரறிஞர்களின் படமூலமான விளக்கத்தி-ருந்தும் இது உறுதியடைகிறது.

இது ஸ்வர உச்சாரணம் என்பதைக் கேட்பவர்களுக்கும் படிப்பவர்களுக்கும் வற்புறுத்திக் கூறுவதற்காகத்தான் 'ஸ' வை இரண்டு தடவை உபயோகப்படுத்தி ச்லோகத்தில் காண்பித்திருக்கிறார் ஸ்ரீ ஆசார்யர், " चलितशिरसा साधुवचने " என்று. ஸங்கீதத்தில் கீழ் 'ஸ', மேல் 'ஸ' என்று இரண்டும் உண்டானபடியால் 'ஸ' என்ற அக்ஷரம் இந்த ச்லோகத்தில் இரட்டித்திருக்கிறது. பகவத்பாதரின் ஸங்கீத ராஸிக்யம் அளவுகடந்தது என்பதற்கு மற்றொரு ச்லோகத்தையும் ஸௌந்தர்ய லஹரியில் காண்கிறோம்.

தேவியினுடைய கபத்தில் மூன்று ரேகைகள் இருக்கின்றன. அவள் உயர்ந்த ஸங்கீத ரஸிகையாகவும், கானம் பண்ணுவதில் சிறந்தவளாகவும் இருப்பதனால், ஸங்கீதத்திலுள்ள மூன்று க்ராமங்களுடைய எல்லையமைப்பைக் காண்பிப்பதற்காக அந்த ரேகைகள் ஏற்பட்டனவோ என்று உத்பரேக்ஷிக்கிறார் ஆசார்யர் : -

गले सेखास्तिस्रो गतिगमक गीतैक निपुणे
विवाहव्यानद्वप्रगुणगुणवंख्याप्रतिभुव: ।
विराजन्ते नानाविघमघुररागाक रमुवां
त्रयाणां ग्रामाणं स्थितिनियमसीमान इव ते ।।

அம்பிகையைப் பற்றிச் சொல்லும்போத 'கதிகமககீதைகநிபுணே' என்பதாக உள்ளது. இந்த நாமாவில் ஸங்கீத பரிபாஷைச் சொற்கள் மூன்று அடங்கி பண்ணுவதில் இருக்கும் மூன்று பாகவங்களிலே, கதி என்பது என்ன என்பதைப்

பற்றி உரையாசிரியர்களான பெரியோர்கள் தெரிவித்திருக்கிறார்கள். லக்ஷ்மீதரர் என்ற உரையாசிரியர் ஸங்கீதத்தில் மார்க்கம், தேசீ என இரண்டு கதிகள் இருப்பதாக அபிப்பிராயப்படுகிறார், ஆனால் காமேச்வரஸூரியின் உரையில் 'கதி என்றால் ஆலாபம்' என்று கூறியிருக்கிறார்:-

"गतिस्तु रागसन्दर्भं आलाप: परिकीर्तित: "।।

கமகம் என்றால் முக்யநாதம் எனப்பட்ட ஸ்தாயீஸ்வரம். गमको मुख्यनादस्य परिपोपो रसात्मक:। அந்த ஸதாயீஸ்வரத்தினுடைய கம்பம். (कम्प அசைவு) கீதம்

பார்வதி விவாஹத்தில் சிவபெருமான் கட்டிய மாங்கல்ய ஸூத்ரம் மூன்று நூல் உடையது. அதைப்போலவே தேவியின் கண்டத்தில் மூன்று ரேகைகள் இருக்கின்றன. ஸங்கீதலக்ஷண சுத்தமாக, இனிமையான குரலைப் பெருக்கும் இந்தக் கண்டத்திலுள்ள ரேகையைப் பார்த்து, ஸங்கீத சாஸ்திரத்தில் பிரஸித்தமாக உள்ள மூன்று கிராமங்களைக் குறிக்கும் ரேகையோ என்று பகவத்பாதர் உத்ப்ரேக்ஷிக்கிறார். இந்த மூன்று கிராமங்கள் காந்தாரம், மத்யமம், ஷட்ஜம் என்பவை.

க்ராமம் என்பது ஸ்வரஸமூகம். எப்படிக் கிராமம் ஜனஸமூஹமோ அது போல இதற்கும் அந்தப் பெயரை ஸங்கீத சாஸ்திரத்தில் வைத்திருக்கிறார்கள். சார்ங்கதேவருடைய ஸங்கீத க்ரந்தத்தில், "ग्राम: स्वरसमूह: स्यात् , मूर्च्छनादे: समाश्रय: तौ द्वौ घरातले स्यातां षडजग्रामस्तथादिम:।" அவரோஹணந்தான் மூர்ச்சனை. இந்த மூர்ச்சனையுடன் கூடியது ராகம். அநேக வித ராகங்களுக்கு உத்பத்தியாக உள்ளவை இந்த க்ராமங்கள். அதைத்தான், 'नानाविधमधुररागाक र -भुवाम् 'என்று ஆசார்யர் தெரிவித்திருக்கிறார். ஸங்கீதத்துக்கு notation அதாவது கோடுகள் அமைத்துக் காண்பிக்கும் வழக்கத்தையும் இங்கே சுட்டிக் காண்பிக்கிறார்.

மூன்று க்ராமங்களுடைய நிலையையும் அவற்றின் எல்லையையும் இநத ரேகைகள் காண்பிக்கின்றன.

என்பதனால் இந்தக் கருத்தை நாம் அறிகிறோம். ஸங்கீத சாஸ்திரத்தின் அடிப்படையான தத்துவங்களை, உத்தமஸ்த்ரீகளுக்குச் சொன்ன ஸாமுத்ரிகாலக்ஷணப் படி கண்டத்தில் காணப்படுகிற மூன்று ரேகைகளைக் கொண்டு அவற்றின் மூலம் காவ்யரஸபத்தமான முறையில் நமக்கு உணர்த்துகிறார்.

"त्रयाणां ग्रामाणां स्थितिनियमसीमान इव ते"

ஶ்ரீமதாசார்ய ஸ்வாமிகள் ஸர்வக்ஞர் என்றும், ஸர்வக்ஞ பீடாரோஹணம் செய்த திவ்யமூர்த்தி என்றும், இன்றும் நம் தேசத்தில் அவருக்குப் புகழ் நிலைத்தீருக்கிறது. ஸர்வக்ஞராக உள்ளவர் ஸங்கீதத்தின் நுட்பங்களையும் அறிந்திருக்கிறார் என்பதில் வியப்பில்லை. பகவத்பாத பரம்பரையில் தோன்றி, அபரசங்கராவதாரமாக மக்கள் போற்றுகிற நம் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அவர்களும் பெரும் ஸங்கீத நுட்பங்களை அறிந்த ரஸிகர் என்பது அவர்களிடம் நெருங்கிய பக்தர்கள் அறிந்த உண்மை. பகவத்பாதர் ஸங்கீத ரஸிகரானபடியால்தான் அந்தப் பரம்பரையில் அந்தச் சக்தி தோன்றுகிறது என்று தெரிகிறது.

# ஈச்வர தத்வம்

Prof. R. தங்கசாமி சர்மா
(ந்யாய வ்யாகரண வேதாந்த சிரோமணி, ஹிந்தி வித்வான், ப்ரவீணா)

சாஸ்திரங்கள் நாம் செய்ய வேண்டிய தர்ம கார்யங்களைத் தெரிவிக்கின்றன. அவற்றை விடாமல் செய்தால் புண்ணியம். அதனால் கடவுளின் அருள் கிடைக்கிறது. புண்ணியந்தான் சுகத்திற்கு ஸாதனம் என்கிறது வேதாந்தம். (फलमत उपपत्ते) கர்மாவைச் செய்தால் அதுவே பயனளிக்காது. அதற்கான பலனை கடவுள் அளிக்கிறான் என்பது அதன் கருத்தாகும். यत् करोषि... तत्कुरुष्व मदर्पणम् என்கிறார் பகவான் கீதையில். எதைச் செய்தாலும் ஈசுவரனுக்கு அதை அர்ப்பணம் செய்ய வேண்டும் என்பது பொருள். ஓர் பிரபுவினிடத்தில் ஓர் வேலைக்காரன் வேலை செய்கிறான். அந்த வேலைக்குரிய பயனைப் பிரபுவினிடமிருந்துதான் வேலைக்காரன் அடைகிறானே தவிர செய்த வேலையே கூலி கொடுப்பதில்லை. இதுபோல் மனிதனும் தான் செய்யும் நல்வினை, தீவினைக்குரிய பலனைக் கடவுளின் மூலமாகத்தான் பெற வேண்டும்.

அந்தக் கடவுளை எப்படி அறிய முடியும் ? तद्विद्धि प्रणिपातेन परिप्रश्लेन सेवया வேதங்கள் உபநிடதங்கள், சொந்த அநுபவம் இவற்றின் மூலந்தான் அறிய முடியும். तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया என்கிறது கீதை. இதுதான் நமக்குப் பிரமாணமாகும். அவரவர் தங்கள் ஆத்ம ஸ்வரூபமாக விளங்கும் பரமேச்வரனை இல்லை என்று கூற யாருக்கும் திறமை கிடையாது. எவன் இல்லை என்கிறானோ அவன் 'நான் யார்' என்று எண்ணிப் பார்த்தால் அவனே 'ஆத்மா' என்ற உண்மை விளங்கிவிடும். கடவுளை ஏற்றுக் கொள்ள இதுவே போதும்.

இதற்கு ஒரு கதை உண்டு. ஈச்வர பக்தன் ஒருத்தன். அவன் பெரும் வித்வான் கூட. அவன் தனக்கு புலவர்களின் ஸபையில் தகுந்த மரியாதை கிடைக்கவில்லை என்று எண்ணினான். எனவே இன்று ஸபையில் நாத்திக மதத்தையே நிலைநாட்டச் செய்ய வேண்டுமென்று முடிவு செய்தான். தன் திறமையால் நாத்திக மதமே உயர்ந்தது, ஈச்வரன் இல்லை என்று பேசி தீர்த்தான். ஏதோ வேகத்தில் பேசிவிட்டானே தவிர வீட்டிற்குச் சென்று வழக்கம்போல் பூஜை

செய்யாமல் இருக்க மனம் துணியவில்லை. பூஜை அறையில் நுழைந்தான். ஆனால் அங்கே பார்த்த போது பூஜைக்கான லிங்கத்தைக் காணவில்லை. ஸபையில் நாத்திக வாதத்தைத் தழுவி பேசியதை பெரும் தவறாக நினைத்தான். மனம் நொந்து போனான். துக்கம் தாளவில்லை. அப்படியே தூங்கி விட்டான். அப்போது அவனுடைய உண்மையான துக்கத்தையறிந்த கருணாநிதியான பகவான் கனவில் தோன்றி அவனுக்கு அருள் புரிந்தார். மறுநாள் காலையில் ஸபைக்குச் சென்று நாத்திக வாதத்தைக் கண்டித்து ஈச்வர வாதத்தை நிலை நாட்டினான். வீட்டிற்குவந்து பூஜை அறையில் பார்த்தபோது சம்புடத்தில் லிங்கத்தைக் கண்டு சந்தோஷமடைந்தான். மேலும் ஒரு மனிதனுக்குப் பிரமை (மதி மயக்கம்) ஏற்பட்டால் ஏதாகிலும் ஒன்றைப் பிடிவாதமாக இல்லை என்று சாதிப்பான். இல்லையென்றால் எது இல்லையென்கிறானோ, அப்படி ஒரு பொருள் இருக்கிறது என்று பலர் நம்புகிறார்களோ, அதுவே அந்தப் பொருள் இருப்பதற்கு ஆதாரம். ஆதாரம் இல்லாமல் பிரமை ஏற்படாது. நாத்திகர்களின் ஈசுவரன் இல்லை என்ற வாதத்துக்கும் ஓர் ஆதாரம் வேண்டும். பிரமத்திற்கும் ஒரு அதிஷ்டானம் அல்லது அடிப்படை அவசியம் வேண்டும். அந்த அதிஷ்டானமே ஈசுவரன் என்றும் பகவான் என்றும் கூறப்படுகிறது. இந்த உண்மை விளங்கினால் எவ்வித வாதத்திற்கும் இடமில்லை. எல்லா வாதத்திற்கும் ஈச்வரனே எல்லையாக இருக்கிறான் என்கிறது ஈச்வர தத்வம்.

1. ஈச்வர தத்வத்தைப் பலவிதமாக வேதாந்திகள் கூறுகிறார்கள். உலகத்திற்கு காரணம் அசேதனம் அதாவது பிரதானம் என்னும் ஜபம் என்கிறார்கள். புருஷன் என்றவனே தாமரையில் தண்ணீர் போல் ஸம்பந்தம் அற்றவன் என்கிறார்கள். அவர்களை ஸாங்கியர்கள் என்று கூறுகிறார்கள்.

2. எல்லா உலகத்திற்கும் காரணமானவர் பசுபதிதான். ஜீவனைக் காட்டிலும் வேறாகவும் சேதனரூபமாகவும் இருக்கும் இவர்தான் வழிபாட்டுக்குரியவர் என பாசுபதர்கள் (சைவர்) கூறுகிறார்கள்.

3. பகவான் வாசுதேவர்தான் உலகத்திற்குக் காரணம். அவரைக் காட்டிலும் வேறான ஸங்கர்ஷணர் என்று பெயர் கொண்ட ஜீவனைப் புத்தி என்கிறார்கள்

பாஞ்சராத்திரிகளான வைணவர்கள்.4. பரிணாமம் (மாறும் சுபாவம்) உள்ளவனாயும், நித்யனாயும்இருக்கிறவன் ஜைனர்கள்.

5. இதைச் செய், அதைச் செய் என்று கர்மானுஷ்டானங்களையே வேதங்கள் தெரிவிக்கின்றன. ஸித்தமான பரம்பொருளை வேதங்கள் கூறுகின்றன என்பது பொருந்தாது. ஆகையால் பிரம்மம் என்ற வஸ்துவே கிடையாது. ஜீவன்தான் ஸர்வக்ஞன் என்று நினைத்து உபாஸிக்க வேண்டும். அதுவே ஈச்வர தத்வம் என்கிறார்கள் மீமாம்சகர்கள்.

6. சாமான்ய மனிதர்களான நம்மால் உயிரை படைக்க முடியுமா? நினைத்து கூடப் பார்க்க முடியாத பல நாதங்கள், இயற்கை எழில் காட்சிகள் நிறைந்த இந்த பூமியை-உலகைப் படைத்திருக்கிறானே அந்த ஞானமூர்த்தி, எல்லாவற்றையும் அறிந்தவன் அவனைக் காட்டிலும் வேறான பரமேசுவரன்தான் என்பதில் என்ன சந்தேகம் என்று தார்க்கிகர்கள் கூறுகிறார்கள்.

7. கடவுள் க்ஷணிகன் நீர்க்குமிழி போல் ஒரு கணத்தில் தோன்றி உறைபவன் ஸர்வக்ஞன் என்பது பௌத்தர்களின் கொள்கை.

8. துக்கம், கர்மபலன் முதலிய சம்பந்தமில்லாத, நித்ய ஞான ரூபியான ஸத்வகுணத்தின் பிரதி பிம்பமாக ஜீவனைக் காட்டிலும் வேறு உருவம் கொண்டவன். ஈச்வரன் என்று பதஞ்சலி ரிஷியை வழிபடும் யோக சாஸ்திரக்காரர்கள் கூறுகிறார்கள்.

9. செயல், அநுபவம் இவ்விரண்டும் இல்லாத ஆனந்தமயமானவன் பரமாத்மா. அவனே பிரம்மம். ஜீவனுடைய உண்மையான ரூபமும் அதுவே. அது அனாதிமாயையான ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற முக்குணங்களோடு சிருஷ்டி சிரேஷ்ட புருஷனான ஈச்வரன் எனப்படுகிறான். அவனே பிரம்மா விஷ்ணு சிவன் என்கிற பெயர்களை அடைகிறான். ஆக பரமாத்மா ஒருத்தர். அவர்தான் ஈச்வரனாக இருக்கிறார் என்பது அத்வைதிகளின் கொள்கை. எவ்விதம் ஈச்வரதத்வத்தை அறிந்து கொள்வோமேயாகில் எந்த விதமான வித்யாசமான எண்ணங்களுக்கும் இடமில்லை என்பது நிச்சயம்.

ப்ரதீபப் பேழை

# சங்கர கீதை

ர. வேங்கடரத்தினம்

பகவத்கீதையும் பகவத்பாதரும்

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா திருவாய் மலர்ந்தருளிய உபதேசம் பகவத்கீதை. அதுவும் ப்ரஹ்ம ஸூத்ரமும் உபநிஷதங்களுமாகச் சேர்ந்து ஹிந்து தர்மத்தின் 'ப்ரஸ்தான த்ரயம்' என வழங்குகின்றன. அவை மூன்றுக்கும் ஆதிசங்கரர் அருளிய விரிவுரைகள் உண்டு. பகவத்கீதைக்குப் பாஷ்யம் அருளிய சங்கராசார்யர் கீதை வற்புறுத்தும் கோட்பாடுகளை ஆங்காங்குத் தம் இதரப் படைப்புகளிலும் வலியுறுத்துவார். கீதையின் தத்துவங்களை ஆசார்யக் கிரந்தங்கள் பலவற்றிலும் நெடுகக் காணலாம்.

கீதையைச் சிறிதேனும் கற்றவனுக்கு யமபயம் இல்லை என்பது ஆசார்ய வாக்கு.

**भगवद्गीता किंचिदधीता गङ्गाजललवकणिका पीता ।**
**सकृदपि येन भुरारिसमर्चा कियते तक्य यमेन न चर्चा ।।**

**பகவத்கீதா கிஞ்சிதகீதா கங்காஜலலவகணிகா பீதா ।**
**ஸக்ருதபி யேந முராரிஸமர்ச்சா க்ரியதே தஸ்ய யமேந ந சர்ச்சா ।।**

இந்தப் பஜகோவிந்த ச்லோகத்திற்குப் பொருள் வருமாறு:

எவனால் கீதை சிறிதேனும் கற்கப்பட்டுள்ளதோ, எவனால் கங்கா தீர்த்தம் ஒரு துளியேனும் பருகப்பட்டுள்ளதோ, எவனால் முரனின் எதிரியாகிய கண்ணபிரானை ஒரு முறையேனும் ஒழுங்காக வழிபாடு செய்யப்பட்டுள்ளாரோ, அவனுக்கு யமனால் வம்பு இல்லை. மனிதனுக்கு அழியாத்தன்மை அளிக்கும் அமர நூல் பகவத்கீதை. அதையும் விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தையும் ஓதுதல் வேண்டும் என்பது நமக்கு ஆசார்ய ஆக்ஞை ஆகும்.

गेयं गीतानामसहस्रं ध्येयं श्रीपतिरूपमजस्रम् ।

**கேயம் கீதாநாமஸஹஸ்ரம் த்யேயம் ஸ்ரீபதிரூபமஜஸ்ரம் ।**

இதுவும் பஜகோவிந்த வாக்கியம் ஆகும் (ச்லோகம் 27). கீதையும் நாமஸஹஸ்ரமும் ஓது தற்குரியவை; அதேபோல் லக்ஷ்மீபதியின் திருவுருவும் எப்போதும் நெஞ்சில் நிலைத்து நிற்க வேண்டும். இங்கு, சங்கரர் ப்ரஸ்தான நூல்கள் மூன்றினுள் அடங்காத விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கும் பாஷ்யம் அருளியுள்ளது கவனித்தற்குரியது.

## கண்ணன் வாக்கும் சங்கரர் விளக்கமும்.

போர்க்களம் போர் நடவாது, அமைதி நிலவும் இடமாக மாறுதற்குரிய நிலை. பார்த்தன் தன் உற்றார் உறவினர்களையும் ஆசார்யர்களையும் பார்த்துப் பதறிப்போய், வில்லை விடுத்துப் போர் வேண்டேன் என உட்கார்ந்து விட்ட தருணம்; கீதை பிறக்கிறது கிருஷ்ண பகவான் திருமுக மண்டலத்தினின்று விஜபனின் ஐபங்களைக் களைந்து, அவனைக் கண்ணபிரான் சுத்தவீரன் ஆக்கத் தேர்த்தட்டில் நிறுத்துகிறார். தர்மக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரப் போர்க்களம், உண்மையிலேயே போர் நடக்கும் இடமாக ஆகிறது; தன் ஸ்வதர்மத்தை அந்த இடம் நிலைநாட்டிப் பெயரைத் தக்க வைத்துக் கொள்கிறது.

கிருஷ்ணனின் கீதோபதேசத்திற்கு ஆதிசங்கர பகவத்பாதர் விளக்கவுரை வழங்கியுள்ளார். பாஷ்யம் ஓர் இடத்தில், गीताशास्त्रं समस्तवेदार्थसारसंग्रहभूतम् (கீதாராஸ்த்ரம் ஸமஸ்தவேதார்த்தஸார ஸங்க்ரஹபூதம்) என்று பேசும். வேதங்களின் உட்பொருளை எல்லாம் பிழிந்து திரட்டித் தருவது கீதை என்று கூறியபின் கீதையின் பெருமையை வேறு எவ்வண்ணம் விளக்க முடியும்?

## சங்கர கீதை

பகவத்கீதை நூலை வாசியாமல், அந்த நூலின்கண் காணும் தத்துவங்கள் அனைத்தையும் சங்கரர் அருளிய நூல்கள் பலவற்றிலும் சாட்சாத்காரம் பெறலாம். பஜகோவிந்த ஸ்தோத்திரம் அத்தகைய நூல்களில் முக்கியமானதொன்று. 'மோஹ முத்கரம்' என்ற பெயரும் அதற்கு உண்டு. பஜகோவிந்தம் பஜகோவிந்தம் என்ற அடிகளைப் பல்லவி போல் கொண்ட முப்பது சாணங்களினால் ஆன அந்த நூல் இரண்டு பகுதிகளாகப் பஞ்ஜரிகா ஸ்தோத்ரங்கள்' என்றும் வழங்குகிறது.

ஸோபான பஞ்சகம் என்ற ஐந்தே ச்லோகங்கள் அடங்கிய உபதேசத் திரட்டு நூல் ஒன்றும் கீதையை வேறொரு வழியே தொகுத்துக் கூறும் படைப்பாகும். ஸாதன பஞ்சகம் என்ற பெயரும் அதற்கு உண்டு. சங்கரர் தம் 32-ஆம் பிராயத்தில் அவதார உத்தேசங்களை

நிறைவேற்றிவிட்டு இறுதியில் சீடர்களை விட்டுப் பிரியும்முன்பு, தம் உபதேசங்கள் அனைத்தையும் தொகுத்துச் சுருக்கி ஐந்தே ச்லோகங்களாக அருளிச்செய்தது ஸோபான பஞ்சகம் எனப்படும்.

இவை போன்றே, 'மநீஷா பஞ்சகம்' என்ற ப்ரகரண நூலும் கீதைக் கோட்பாடுகளை ஐந்தே பாடல்களில் அளிப்பது. ஒரு நாள் சங்கராசார்யர் ஸ்நானத்திற்குச் செல்லும்போது பறையன் ஒருவன் வேண்டுமென்றே அருகில் வந்து, ஆசார்யர் 'எட்டிச் செல்' என்றதையும் புறக்கணித்துச் சில கேள்விகள் கேட்டானாம். அந்தச் சந்தர்ப்பத்தில் பதிலாகக் கூறப்பெற்ற ஐந்து ச்லோகங்களே மனீஷா பஞ்சகமென்று வழங்குகின்றன. மநீஷா என்ற சொல்லுக்கு விருப்பம் என்ற பொருள் உண்டு; அறிவு என்ற அர்த்தமும் கூறுவர்.

இன்னும் கௌபீன பஞ்சகம் என்னும் யதிபஞ்சகம், தந்யாஷ்டகம், விவேகசூடாமணி, ஆத்ம ஷட்கம் (சிவோஹம் சிவோஹம் என முடியும் 6 ஸ்லோகத் தொகுப்பு) இப்படிப் பல நூல்கள் ஆசார்யர் அருளியவையாக உள்ளன. சங்கர கீதை என்ற ஆசாரிய கிரந்தம் அவ்வளவையும் பொதுவாக, ஆனால் பொருத்தத்தோடு நாம் கூற முடியும்.

## நிலையாமை

கண்ணபிரான் எடுத்த எடுப்பில் கடிந்துகொள்வார்-'இந்த இழிந்த இதய மெலிவை ஒழித்துப் பேடித்தன்மையை அகற்றி, எழுந்து நில்லடா' (2-3). பதிலுக்குப் பார்த்தன் பழைய பல்லவியையே பாடுவான். உடனே பரந்தாமன் உபதேசத்தைத் தொடங்குவார். வாழ்க்கையின் நிலையாமைதான் கண்ணபிரானின் முதல் வாதமே. பிறந்தால் இறப்புத் திண்ணம்: இறந்தால், மீண்டும் பிறப்பதும் நிச்சயம். எனவே, உன்னால் ஒன்றும் செய்ய முடியாத ஒரு விஷயத்தில் உன் மனத்தை ஏன் உளைச்சலில் வீணில் சிக்க வைத்துத் தவிக்க வேண்டும்?

जातस्य हि ध्रुवो मृत्युर्ध्रुवं जन्म मृतस्य च ।
तस्मादपरिहार्येऽर्थे न त्वं शोचितुमर्हसि ।।

ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யுர் த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச ।
தஸ்மாதபரிஹார்யேர்த்தே ந த்வம் ஷோசிதுமர்ஹஸி ।।

'உன்னால் பரிகாரம் காண முடியாத விஷயத்தில் நீ கவலை கொள்வதற்கு உரியவன் அல்ல.' இவ்வாறு அறைந்து சொல்வார் கண்ணபிரான்.

திரும்பத் திரும்ப மனிதன் பிறப்பு இறப்புச் சுழலில் சிக்கித் தடுமாறுகிற கதையைப் பேசும் ச்லோகம் பஜகோவிந்தத்தில் உள்ளது.

पुनरपि जननं पुनरपि मरणं पुनरपि जननीजठरे शयनम् ।
इह संसारे बहुदुष्पारे कृपयाऽपारे पाहि मुरारे ।।

**புநரபி ஜநநம் புநரபி மரணம் புநரபி ஜநநீஜடரே ஸ்யநம் ।**
**இஹ ஸம்ஸாரே பஹுதுஷ்பாரே க்ருபயா'பாரே பாஹி முராரே ।।**

மீண்டும் பிறப்பு; திரும்பவும் இறப்பு, பழையபடியே தாயின் வயிற்றில் படுத்திருத்தல்-இவ்வாறு மீள முடியாத வாழ்க்கைச் சகடத்தைக் கூறிவிட்டு, அதே மூச்சில் பகவான் சங்கரர் முராரியை அணுகுகிறார். 'கடத்தற்குக் கடினமான, கரையிலாத இந்த ஸம்ஸாரக் கடலினின்று கருணைகொண்டு காத்தருள்க' என்று கிருஷ்ண பகவானை வேண்டுகிறார். பரிகாரம் கீதாசாரியனிடமே உள்ளது. என்பது குறிப்பு.

ஆத்மாவுக்கு அழிவேது?

கண்ணபிரான் உடலின் நிலையாமையைக் கூறிவிட்டு, அதே தொடர்பில் 'ஆத்மா அழிவற்றது' என்பதையும் புகட்டுவார். 'நைந்த ஆடைகளைக் களைந்துவிட்டு மனிதன் அன்றாடம் வேறு ஆடை அணிகிறாற்போல், ஆன்மாவும் புதுப் புது உடலில் புகுந்து கொள்கிறது. (222) அக்கினியோ அஸ்திர சஸ்திரங்களோ ஆன்மாவை அழித்து விட வொண்ணாதவை. (2-28).' இந்த அடிப்படை உண்மையை நினைவூட்டுவது, அர்ஜுனன், தான் எவரையும் சாகஅடிக்க விரும்பவில்லை என்று பேசியமையினாலேயே. சாவது சடலமே தவிர, உள்ளுயிர் அழியாதது ஆகும்.

இந்தக் கோட்பாட்டினை ஆசார்யர் ஸோபான பஞ்சகம் மூன்றாம் செய்யுளில் வலியுறுத்துவார். 'இவ்வுடலே நான் என்ற நினைப்பை விட்டொழி. देहेऽहं मतिरुज्झ्यताम् **தேஹேஹம்மதிருஜ்யதாம்**. இதற்கு முந்திய அடியில், என்ன எண்ணம் இருக்க வேண்டும் என்பதையும் கூறுவார். ? ब्रह्मास्मीति विभाव्यताम् **ப்ரஹ்மாஸ்மீதி விபாவ்யதாம்.** யானே பரம்பொருள் என்று உணர்.

இந்த இரண்டு கருத்துக்களையும் ஒருங்கு நோக்கினால், நீ வெறும் உடல் அல்ல; பரம்பொருளின் ஓர் அம்சம் என்று அறிவாயாக' என்ற மகத்தான தத்துவம் உபதேசிக்கப் பெறுகிறது.

பரம்பொருளின் பண்புகள்தாம் யாவை? இது தெரிந்தால், அந்தக் குணங்கள் ஆத்மாவில் பொருந்தியுள்ளனவா என்று பார்த்து விடலாமே?

ஆம், பரம்பொருள் அழிவற்றது; அனைத்திலும் உள்ளது; சஞ்சலமற்றது. இந்தப் பண்புகளை அப்படியே ஆத்மாவுக்குக் கண்ணபிரான் கூறுவார்.

**अच्छेद्योऽयमदाह्योऽयमक्लेद्योऽशोष्य एव च ।**
**नित्यः सर्वगतः स्थाणुरचलोऽयं सनातनः ॥**

**அச்சேத்யோயமதாஹ்யோயமக்லேத்யோரோஷ்ய ஏவ ச ।**

**நித்ய: ஸர்வகத: ஸ்தாணுரசலோயம் ஸநாதந: ।**

இந்த விளக்கம் ஜீவாத்மாவை அப்படியே பரமாத்மாவுக்கே கொண்டு செல்கிறது அல்லவா? ஆன்மா வெட்டவொண்ணாதது, சுட்டுப் பொசுக்கவொண்ணாதது. நனைவதுமில்லை, காய்வதுமில்லை அது. அழியாது அனைத்திலும் நிலையாய் அசையாது என்றும் இருப்பது என்ற வர்ணனை ஆத்மாவின் அழியாத்தன்மையை உணர்த்துவதா? அன்றி, ஆன்மாவின் தெய்விகத் தொடர்பைச் சுட்டுவதா?

(தொடரும்)

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

**செஞ்சொற்கவி புலவர் மா வெங்கடேசன்**



நான் சங்கரமடத்தில் தொடர்பு கொண்டவன். ஒரு நாள் தேனம்பாக்கத்திற்கு என் நண்பரை அழைத்துச் சென்றிருந்தேன். ஸ்ரீ பெரியவர்கள் கிணற்றிற்கு வடக்கில் தரிசனம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். என் நண்பரை பெரியவாளிடம் சுட்டிக் காட்டி இவர் உங்கள் அனுக்ரஹம் வேண்டி வந்துள்ளார் என்று கூறினேன். அவர் ஊர் பெயர் முதலியவற்றைத் தெரிவித்தேன். அப்போது என்னை உற்று நோக்கிய பெரியவா நீ யார்? என்று வினவ அதிர்ச்சியினால் ஒன்றும் சொல்ல முடியாமல் திணறி உளறிக் கொட்டினேன். அங்கிருந்த அணுக்கத் தொண்டர் இவர் புதுப்பெரியவாளிடம் கைங்கைர்யம் செய்கிறவர் தமிழ் புலவர்என்று அறிமுகப் படுத்தினார். பெரியவாளும் ஆசீர்வாதம் செய்து அனுப்பினார். இது என் அகம்பாவத்திற்கு தந்த தண்டனை. ஏன் அகம்பாவம்?

புதுப்பெரியவர்களிடம் அனுக்ரஹம் இருந்த காலத்தில் மகாபெரியவரிடத்தில் பிடிப்பு ஏற்படவில்லை. எப்போதாவது எதிர்பாராத ஸமயங்களில்தான் பெரியவரைத் தர்சனம் செய்வேன். அது கூட ஏனோதானோவாகத்தான் இருக்கும். புதுப்பெரியவரின் அனுக்ரஹம் பெற்றதனால் என்னை ஸ்ரீமடத்தின் முக்யஸ்தனாக எண்ணிக் கொண்டிருந்தேன் / இந்த ஆணவ இருளை தேனம்பாக்கத்தில் ஒரு நொடியில் தம் வாக்கினால் போக்கிய மனித தெய்வத்தின் மாட்சியை சொல்ல முடியாது. அதன் பின் அவரை தர்சிக்கும் வாய்ப்பு அவர் வட தேசயாத்ரையில் இருந்ததால் ஏற்படவில்லை. காஞ்சியில் அவர் மீண்டும் வந்த பிறகு பல முறை அவரைத் தர்சிக்க வாய்ப்பு ஏற்பட்டது. சிலவற்றைக் கூறுகிறேன்.

## இன்னொரு சம்பவம்

*1986ஆம் வருடம் ஸ்ரீ சங்கர ஜயந்தி ஸ்ரீ மடத்தில் விமரிசையாக நடந்தது. அன்றைய தினம் பெரியவாலைப் போற்றி ஒரு விருத்தப்பாவை இயற்றி அவரிடம் சமர்ப்பிக்க ஏண்ணினேன். அதை எடுத்தொக் கொண்டு பெரிய வித்வான்கள் மத்தியில் அமர்ந்து கொண்டிருந்த மகாபெரியவாளிடம் வாசிக்கச் சென்றேன். ஜன சமுத்ரம். இப்போது தரிசனம் கிட்டாது என்று எண்ணி ஓரமாக அமர்ந்துவிட்டேன். இரவு 9 மணி கூட்டம் குறைய ஒரு தூண் அருகில் பெரியவா அமர்ந்திருக்க ''பெரியவாளின் திருவடியைப் போற்றி பாடல் ஒன்று இயற்றியிருக்கிறேன். ஏற்றருள வேண்டும்'' என்றேன்.*

*அடியேனை வாசிக்குமாறு பணித்தார்கள். பாடல் இதுதான்* **''கையிலாயச்சங்கரனே கருணையாலே காலடியில் சங்கரராய்க் கருவில் தோன்றி உயிர்வாழ்வின் நோக்கமதை உணர்ந்து காட்டி உலக குரு சங்கரராய் ஓங்கி நிற்கும் இயல்புடனெ காஞ்சியிலின்றெவரும் காண எழில் சந்த்ர சேகரராய் அருளுகின்றார் ! தயை பொங்கும் அவர் பாத தாமரைப்பூ தலைவைத்துப் போற்றி நிதம் தழைத்து வாழ்வாம்''** *இப்பாடலைப் பற்றி என்ன கேட்பார்களோ என்று அச்சத்தோடு நின்றேன். பெரியவா எதுவும் சொல்லவில்லை. ஒரு முக்யஸ்தரைக் கூப்பிட்டு ஒரு தட்டில் இரு மாம்பழங்களை வைத்து புன்முறுவலோடு ஆசீர்வதித்து அனுப்பினார்.*

*சற்று யோசித்துப் பார்த்தேன். என் பாடலில் சொல் பொருள் நயம் கற்பனை வளம் எதுவுமில்லை. ஸ்ரீசரணர் அதில் குற்றமாக எதுவும் கேட்டிருக்கலாம். எதுவும் கேட்காமல் எனது அன்பையும் ஆர்வத்தையுமே கண்டதால் தக்ஷிணாமூர்த்தி போல் இரு கனிகளாக ப்ராசதமளித்தனர். இக்கருணையை ஆயுள் உள்ளவரை மறவாது என் உள்ளம் போற்றிக் கொண்டே இருக்கும்.*

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

பௌராணிகர் சிஷ்யனிடம் இன்று ஒரு வித்யாஸமான கதை, வித்யாஸமான நபரைப் பற்றிக் கூறப்போகிறேன். கேள் என்று கூறி தொடங்கினார். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து'' வேண்டாமை என்னும் விழுச்செல்வம்'' இப்படி பழ மொழிகளுக்கேற்ப ஒரு மானிடன் அதுவும் ஒரு சூத்ரன் இருந்தான். அவன் பெயர் துலாதரன். கிட்டதட்ட உஞ்சவ்ருத்தி செய்து அதனால் தன் குடும்பத்துடன் வாழ்க்கையை நடத்தி வந்தான். பிறத்தியார் பொருளுக்கு என்றும் ஆசைப்பட்டதில்லை. தனக்கென்று இரண்டு நைந்த ஆடைகளை அணிந்து வந்தான். இவனை சோதிப்பதற்காக பகவான் விஷ்ணு இவன் நதியில் குளிக்கும்போது அவனுடைய ஆடையை எடுத்துவிட்டு புதிய விலை உயர்ந்த ஆடையை வைத்து விட்டு மறைந்தார். குளித்து வந்த துலாதரன் அந்த புதிய ஆடையை யாருடையதோ என்று எண்ணி அதைத் தொடக்கூட இல்லை.

இன்னொரு சமயம் அவன் வரும் வழியில் ஒரு தங்க மாங்கனியை வைத்தார். அதையும் அவன் தொடவில்லை. தங்கம் என்றும் ஆபத்தானது. அதனால் பாதுகாப்பு ப்ரச்சனைகள் வரக்கூடும், அதைக் காப்பது கடினம் என்று எண்ணி அதைத் தொடாமலே நகர்ந்தான். ஸ்வர்கத்தில் தேவர்கள் ஆச்சர்யப்பட்டனர். அவனை இன்னும் சோதிக்க ஸ்ரீஹரி எண்ணினார். ஒரு பக்திமானக மாறி அவனிருக்கும் ஊரில் தங்கி உபன்யாசங்கள் செய்யத் தொடங்கினார்.

அவருடைய புகழ் எங்கும் பரவி மக்கள் அவரைக் காண தினமும் வந்தனர். துலாதரனின் மனைவியும் அவரைக் காண வந்து அவரிடம் தன்னுடைய வறுமை நிலையைக் கூறி இதிலிருந்து விடுபட முடியுமா என்று கேட்டாள். அவர் எப்படி விதி அவளுடைய கணவனுக்கு செல்வத்தைத் தந்தது அதை எப்படி அவன் புறக்கணித்தான் அதனால் விமோசனமில்லை என்றும் இன்னும் ஒரு தடவை தங்க மாங்கனியை ஏற்றுக் கொள்ளச் சொல், வாழ்வு வளம் பெறும் என்று பணித்தார். அவளும் துலாதரனிடம் இதைக் கூற அவன் அவரைக் காண வந்தான். அவரிடம் கூறினான். வந்தனம். நீங்கள் கூறியதை மீண்டும் கூறவும்.

உபன்யாசகர் செல்வத்தைப் புகழ்ந்து பேசி இப்போதும் அந்த தங்க மாங்கனி கிடைக்கும் பயன்படுத்திக் கொள் என்றார். துலாதரன் சொன்னான் :

தேவரீர் நான் எப்போதும் செல்வத்தை விரும்பியதில்லை. எவ்வளவு தேவையோ அவ்வளவு இருந்தால் போதும். நிலையில்லாத இந்த தனத்தை விரும்பேன். தனம் மன அமைதியைக் கெடுக்கும். மற்றவர்கள் நம் மீது பொறாமை பட வைக்கும். தனம் நம்மிடம் வந்தால் அதைப் பாதுகாக்க வேண்டும். போறும் என்னும் எண்ணம் இருக்காது. மேலும் சேர்க்கத் துடிக்கும். உண்மையான அமைதியான மத வாழ்க்கையை கெடுக்கும். அதன் மாய வலையில் சிக்காமல் விலகிப்போக நான் ஆசைப்படுகிறேன். எனவேதான் தங்க மாங்கனியை விரும்பவில்லை.

துலாதரன் பேச்சைக் கேட்ட தேவர்கள் மகிழ்ச்சியடைந்து பூமாரி பெய்து ஸ்வர்காரோஹணத்திற்கு விமானம் அனுப்பினர். உபன்யாஸகரும் தன் நிஜஸ்வரூபத்தைக் காட்டி அவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் அனுக்ரஹம் வழங்கினார். இந்த நாடகமெல்லாம் அவனுடைய உறுதியான எண்ணத்தை உலகமறியச் செய்யத்தான் என்று கூறி ஸ்ரீஹரி மறைந்தார்.

வேடிக்கை என்னவெனில் ஸ்வர்க்கத்திலும் துலாதரன் எந்த திமிருமில்லாமல் பொறாமை இல்லாமல் எளிய வாழ்க்கையை வாழ்ந்தான் என்று கூறி பௌராணீகர் ஓய்ந்தார்.

(பத்ம புராணம்)

(தொடரும்)

# மகாபாரத சுருக்கம்

**பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.**
**டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.**
**மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா**

க்ருஷ்ணன் விடை பெற்றுச் சென்றபின் கர்ணன் கங்கை கரையில் இருக்க அவனைக் காண குந்தி தேவி வர அவளுக்கு அஞ்சலி செய்து ''நான் கர்ணன் ராதேயன் அதிரதன்'' என்று கூறி வணங்கினான்.



குந்தி நீ குந்தியான எனக்குப் புதல்வன். அதிரதனின் புதல்வனில்லை. நான் கன்னியாயிருக்கும்போது பிறந்தவன், என் புதல்வன். நீயும் அர்ஜுனனும் இணைவதை கௌரவர்கள் பார்க்கட்டும்.

கர்ணன் என் நலத்தைப் பேணும் தாயாய் நீங்கள் இருந்ததில்லை. உன் நலனுக்காக இப்போது என்னைக் காண வந்துள்ளீர்கள். நான் பாண்டவர்களுடன் சேர்ந்தால் உலகம் என்ன சொல்லும்? என்னை நம்பி இருக்கும் என்னை வணங்கும் வீரர்களுக்கு என்ன பதில் கூறுவேன் / உன் புதல்வர்களுடன் த்ருதராஷ்டிரனின் புதல்வர்களுக்காக போர் புரிவேன்.

அர்ஜுனனைத் தவிர உங்கள் புதல்வர்களைக் கொல்லேன். உன்னுடைய பஞ்ச புத்ரர்கள் சாகார். நானில்லாமலோ அர்ஜுனன் இல்லாமலோ இருப்பர். உங்களுக்கு வந்தனம். ஹஸ்தினாபுரத்திலிருந்து உபப்லாவ்யத்திற்கு வந்த க்ருஷ்ணன் பாண்டவர்களிடம் நடந்ததைக் கூறினான்.

*க்ருஷ்ணர் எது பத்யமோ எப்போதும் நல்லதோ அது துர்யோதனனுக்குச் சொல்லப்பட்டது. அது ஏற்கப்படவில்லை. எனவே போரின் மூலம் தண்டனைக்கு அந்த பாபிகள் தகுதியானவர்கள். ஏற்கனவே அரசர்கள் தங்களின் நாசத்திற்காக குருக்ஷேத்ரம் வரத்தொடங்கியுள்ளனர்.*

***தர்மர் :*** *தம்பிகளே க்ருஷ்ணன் சொல்லைக் கேட்டோம். யுத்தம் நிச்சயம். போருக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யுங்கள். தர்மரின் வார்த்தையைக் கேட்ட மன்னர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். குருக்ஷேத்ரம் ஏகினர். யுத்த சன்னாதம் முழங்கினர்.*

*ஹஸ்தினாபுரத்தில் போருக்கு ஆயத்தமான துர்யோதனன் ஸேனாதிபதி ஷண்முகன் எப்படியோ அப்படியே நமது சேனையை வழி நடத்த பணிவுடன் பீஷ்மரிடம் கேட்டான்.*

***பீஷ்மர்*** *: நீ எப்படியோ அப்படித்தான் பாண்டவர்கள் எனக்கு. அவர்கள் என்னால் அழிக்கப்பட மாட்டார்கள். ஆனால் ஒரு நாளைக்குப் பத்தாயிரம் போர் வீரர்களைக் கொல்வேன். ஒரு நிபந்தனை. நானோ அல்லது கர்ணனோ முதல் தளபதியாக இருப்போம்.*

***கர்ணன்*** *: பீஷ்மர் ஜீவிக்கும் வரை நான் யுத்தம் செய்யேன். அவரின் மறைவுக்குப் பிறகு வில்லேந்துவேன் அர்ஜுனனைக் கொல்வேன். பின்பு ஒரு நாள் காலை மன்னர்கள் துர்யோதனனால் தூண்டப்பட்டு யுத்த முழக்கத்துடன் களம் புகுந்தனர்.*

*அதே ஸமயத்தில் பாண்டவர்கள் பக்கம் தர்மரின் ஆணையை ஏற்று த்ருஷ்டத்யும்னன் தலைமையில் களம் புகுந்தனர்.*

*உத்யோக பர்வம் முற்றும்*

*(தொடரும்)*

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ

**230. கேள்வி : பாபங்கள் எத்தனை விதம் அவை யாவை?**




**பதில் :** பாபங்கள் ஒன்பது விதம் மஹா பாதகம் அதிபாதகம், உப பாதகம், ஸம பாதகம், ஸங்கரீகரனம், மலினீ கரனம் அபாத்ரீ கரனம், ஜாதிப்ரம்ச கரணம் ப்ரகீர்ணம்.

மஹாபாதகம் ப்ராம்மணனைக் கொல்லுவது, நிஷித்த பானத்தை அருந்துவது, ஸ்வர்னத்தைத் திருடுவது, குருபத்னியை சேர்தல் இவை ஸேர்ந்தவர்களோடு சேர்தல்.

அதி பாதகம், கர்பத்தைக் கொல்லுதல், யாகம் செய்கின்றவர்களைக் கொல்லுதல், பொய்சொல்லுதல் குருவைத் தடுத்தல், ஸ்த்ரீ, சிசு வதம் செய்தல்

231. **கேள்வி :** பதிதர்கள் யார்?

**பதில் :** மாதா பிதாக்களின் வம்சத்தில் தடுக்கப்பட்ட பெண்ணை மணந்தவன், நாஸ்திகன் சாஸ்த்ர நிஷித்த கர்மாக்களை அடிக்கடிச் செய்பவன் பதிதனோடு ஸேர்பவன்.

232. **கேள்வி :** பதனீயங்கள் என்றால் என்ன ?

**பதில் :** கடல் யாத்ரை, ப்ராம்மண சொத்தை அபகரிப்பது, பொய் சொல்வது விற்கக்கூடாத வஸ்துக்களை விற்பது, ஸூத்ர ஸ்த்ரீயைச் சேர்வது.

233 **கேள்வி :** ப்ரம்ம ஹத்திக்குச் சமான பாபங்கள் யாவை ?

**பதில் :** பாபங்கள் ஒன்பது தன்னைச் சிறப்பிப்பதற்காக பொய் சொல்லுதல், அரசனிடம் பிறரை இம்சிக்கக் கோள்சொல்லுதல், குருவினிடம் பொய்யாக தோஷம் சொல்லுதல், வேத நிந்தனம், மித்ர வதம், அத்யயனம் செய்த வேதத்தை மறத்தல், பொய் சாக்ஷி சொல்லுதல்.

234. **கேள்வி :** ப்ரம்மக்னன் என்பவன் யார்?

**பதில் :** ப்ராம்மணர்கள் புஜிக்கும்போது எழுந்து போகிறானோ அவன் ப்ரம்மக்னன். நீசனாகிய எவன் வித்யா கர்வத்தால் ஸபையின் நடுவில் ப்ராம்மணனை வெல்கிறானோ

அவன் ப்ரம்மக்னன். பிறருடைய தோஷத்தை அரசனிடம் கோள்சொல்லுபவன்.

235. **கேள்வி :** ஸுராபானத்திற்குச் சமமான பாதகங்கள்

**பதில் :** வேத விஸ்மரணம், வேத நிந்தனை, பொய் சாக்ஷி, மித்ர வதம், பூண்டு உண்பது, கபடமாகப் பேசுதல், தன்னைப் புகழ்ந்து பேசிக்கொள்வது, வெண்கலப் பாத்ரத்தில் இள நீரை வைத்தல், உப்புடன் கூடிய பாலை அருந்துதல், வண்ணான் துறையில் நீராடுவது

(தொடரும்)


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

*அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.*

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# வேதோ நித்யம் அதீயதாம்

## உபநயனமான அந்தண மாணவர்களுக்கு முக்கிய அறிவிப்பு

"ஜந்தூனாம் நரஜன்ம தூர்லபம்
அத: பும்ஸ்த்வம் ததோ விப்ரதா"

என்று ஸ்ரீ சங்கர பகவத்பாதர் தன்னுடைய விவேக சூடாமணி என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று ஔவையாரும் இதே கருத்தை கூறுகிறார். அந்தண குலத்தில் பிறந்த அனைவரும் வேதாத்யயனம் செய்ய வேண்டும் என்பது நியதி. இந்த நியதியை பல சிரமங்கள் வந்த பொழுதும் நமது முன்னோர்கள் கடைபிடித்து வந்துள்ளனர். ஆனால் தற்பொழுது உள்ள சமுதாய சூழ்நிலைகளால் இந்த அவிச்சின்னமான வேத பரம்பரையில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதை சரிசெய்து மீண்டும் இந்த வேத பரம்பரையானது தழைத்தோங்க வேண்டும் என்பதற்காகத்தான் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பல ஊர்களில் பல வேத பாடசாலைகள் ஸ்தாபித்து நடத்தி வருகின்றார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் பள்ளி படிப்பும் மிக முக்கியமான ஒன்றாக மாறிவிட்டதால் வேதாத்யயனம் செய்து கொண்டே பள்ளியிலும் படித்து தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பும் ஸ்ரீ சங்கர மடம் மூலம் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தற்பொழுது காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரீ தண்டபாணி ஓரியண்டல் பள்ளியில் பள்ளி படிப்பும், அதோடு சேர்ந்து வேதம், சம்ஸ்க்ருதம், மற்றும் நமது சம்ப்ரதாய பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்மொழியில் உள்ள பக்தி இலக்கியங்களும், நீதி நூற்களும் கற்பிக்கப்படும்.

இதன் சிறப்பம்சம் என்னவென்றால் இத்திட்டத்தில் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் இரு வழிகளிலும் பயிற்சி தரப்படும். கல்வி, உணவு, தங்குமிடம் எதற்கும் கட்டணம் கிடையாது. 10 வயது முதல் 13 வயது வரையுள்ள உபநயனமான மாணவர்கள் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம். பள்ளி படிப்பு முடிந்ததும் கல்லூரி படிப்புக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

பெற்றோர்கள் இந்த பொன்னான வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு தங்கள் குழந்தைகளுக்கும் நமது சமுதாயத்திற்கும் வளமான எதிர்காலம் அமைய ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்

**R.வெங்கடசுப்ரமண்யன் :8903015221**
**V.P.ஸ்ரீனிவாசன் : 9445104873**
**G.பிரசாந்த் : 8056375421**
**K.ஸ்ரீராம் : 9894775434**